பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 21 புதன்கிழமை 05.02.2020 கதிர் 91

### இது ரகசியம் அல்ல!

ராஜபக்ஷக்களின் அரசோடு மைத்திரி தரப்புக்கு முரண்பாடு முற்றிவருகின்றமை குறித்து நேற்று இப்பத்தியில் ப்கோடி காட்டியிருந்தேன். அது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

நேற்றுப் பகல் கொழும்பில் சுதந்திர பக்கம் 02 ›››

# இலங்கை ஒற்றையாட்சி கொண்ட நாடு!

## சுதந்திர தின நிகழ்வில் கோட்டா திட்டவட்டம்



கொழும்பு, பெப். 05

இலங்கை ஒற்றையாட்சியுடைய அரசாகும். சுதந்திரமும், இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஜனநாயகக் குடியரசாகும்.

– இவ்வாறு நேற்றுத் தனது சுதந்திர தின உரையில் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

எனது ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டின் பௌத்த தத்துவத்தைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன் என அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

(அவரது உரையின் முழுவடிவம் 8ஆம் பக்கத்தில்)

# தனக்கு வாக்களிக்காத தமிழரை பழிவாங்குகின்றார் கோட்டாபய!



## இதனால் தேசிய சுதந்திர தின நிகழ்வை புறக்கணித்தோம் என்கின்றார் சம்பந்தன்

கொழும்பு, பெப்ரவரி05

தமிழர்களைப் புறக்கணிக்கும் வகையிலேயே கோட்டாபய தலைமையிலான அரசு செயற்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிக்காத தமிழ் மக்களைப் பழிவாங்கும் வகையிலேயே அவர் செயற்படுகின்றார். இந்தக் காரணங்களால் தேசிய சுதந்திர தின நிகழ்வை நாம் புறக்கணித்துள்ளோம்.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

தமிழர்களையும், தமிழ் மொழியையும் புறக்கணிக்கும் அரசின் செயற்பாடுகளை நாம் ஆதரிக்க முடியாது எனவும் அவர் கூறினார். பக்கம் 03 ›››

## யாழ்.பல்கலைக்கு முன்பாக நேற்றுக் கறுப்புக் கொடிகள்



யாழ்ப்பாணம்,பெப்.05

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினமான நேற்று பக்கம் 03 ›››

## யாழ்.பல்கலை துணைவேந்தர் பதவிக்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரத் திட்டம்

### அதுவரை பதில் துணைவேந்தராக மிகுந்தன்?

யாழ்ப்பாணம்,பெப்.05

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் இரத்துச்செய்யப்பட்டு, புதிதாகக் கோரப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் கொழும்பைச் சேர்ந்த ஒருவரைத் துணைவேந்தராகக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன எனஅறியவருகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களைப் பயன்படுத்தித் துணைவேந்தர் பதவிக்கு முன்னைய பக்கம்03 ›››

## இராணுவப் பதக்கங்களை அணிந்திருந்த ஜனாதிபதி!



கொழும்பு, பெப். 05

இலங்கையின் 72ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு நேற்றுக் காலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. பக்கம் 03 ›››

## இராட்சதக் கணவாய் மன்னாரில் சிக்கியது



மன்னார், பெப். 05

மன்னார்–வங்காலைக் கடலில், நேற்றுக் காலை மீன் பிடிக்கச் சென்ற மீனவர் பக்கம் 03 ›››

## கொழும்பில் ஒலித்த தமிழ்த் தேசிய கீதம்!



கொழும்பு,பெப்.05

இலங்கையின் 72ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நேற்று இடம்பெற்றன.

சிங்கள மக்களால் பெருமளவில் பக்கம் 03 ›››

## டெனீஸ்வரனுக்கு 4 மாதச் சம்பளம்!

யாழ்ப்பாணம், பெப். 05

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனால் பதவி நீக்கப்பட்டமை தவறு என்று நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளைக்கு அமைவான 4 மாதங்களுக்குரிய சம்பளம், முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரனுக்கு வடக்கு மாகாண பக்கம் 03 ›››

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று இரண்டாகப் பிரிந்து போராட்டம்





கிளிநொச்சி, பெப். 05

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சியில் நேற்று முற்பகல் பத்து மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் பக்கம் 03 ›››

காலைக்கதிர் Kalaikathir



# இலங்கையின் சுதந்திர தினமான நேற்று பிரிட்டனில் ஈழத்தமிழர்கள் ஆர்ப்பாட்டம்








இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினமான நேற்றைய நாளைத் தமிழர்களின் கரி நாள் என வெளிப்படுத்தி பிரித்தானியாவில் புலம் பெயர் வாழ் தமிழர்களினால் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கபட்டது.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் ஏற்பாட்டில் பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னால் ஒன்று திரண்ட அவர்கள் புலிக் கொடிகளை கைகளில் ஏந்தியவாறு இலங்கையில் கொண்டாடப்படும் சுதந்திர தினத்திற்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கான நீதியைக் கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'காணாமல் போன எமது உறவுகள் எங்கே?', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்', 'இரகசிய சித்திரவதை முகாம்களை மூடு','தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை வழங்கு' – எனப் பல்வேறு கோஷங்களை எழுப்பியமையுடன், எதிர்ப்பு ஆட்டத்திலும் ஈடுபட்டனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட ஈழ உணர்வாளர்கள் கலந்து கொண்டனர்.










## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சதுக்கத்தில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியார் மிஸ்ஸிங். எனது நேற்றைய தகவலை வலியுறுத்தும் காரணமாக இது இருக்கக்கூடும்.

அதுவல்ல முக்கிய விடயம். இந்த நிகழ்வுக்கு மற்றொரு முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க வந்திருந்தார். வந்திருந்தமை மட்டுமல்ல, மற்றொரு முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவுடன் சிரித்துப் பேசிக் கொண்டுமிருந்தார்.

கடந்த வாரமும் 27ஆம் திகதி கொழும்பில் இந்தியத் தூதுவர் தரன்ஜித்சிங் சித்துவின் பிரிவுபசார விழாவில் சந்திரிகா – மஹிந்த சந்திப்பு நடந்தது. இருவரும் வலு நெருக்கமாக சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் படம் மற்றும் காணொலிக் காட்சிகள் வெளியாகின. என்ன பேசியிருப்பார்கள் என்று அறிய நோண்டிப் பார்த்தேன்.

நேரில் பார்த்ததும் முதலில் முகமன் வார்த்தைகள் பரிமாறப்பட்டன.

*"நீங்கள் எல்லோரும் இப்போது பெரிய ஆள்கள். அப்படித்தானே...!"* – என்றாராம் சந்திரிகா.

*"இல்லை மேடம். நாங்கள் அப்படியேதான் இருக்கின்றோம். நீங்கள்தான் அப்படி நினைக்கின்றீர்கள், அப்படிக் கூறுகின்றீர்கள்...."*– என்று சிரித்துக் கொண்டு பதிலளித்தாரம் மஹிந்தர்.

தொடர்ந்து சற்றுப் பேசிக் கொண்டு இருந்துவிட்டு சற்று நகர்ந்த மஹிந்தர், சந்திரிகா அம்மையார் தனிமையில் இருக்கின்றமையைப் பார்த்தார். தம்முடன் வந்த தனது துணைவியாரை அவருடன் பேச அனுப்புவார் என்று கூறிக்கொண்டே துணைவியார் ஷிராந்தியை அழைத்து சந்திரிகாவுக்கு பக்கத்தில் அமர்த்தி விட்டு நகர்ந்தார்.

1996 முதல் 2006 வரை நாட்டின் முதல் பெண்மணியாக இருந்தவரும் 2005 முதல் 2015 வரை நாட்டின் முதல் பெண்மணியாக இருந்தவரும் நீண்ட நேரம் சிரித்துப் பேசியும் சீரியஸாக உரையாடியும் கொண்டிருந்தனர்.

சந்திரிகாவுடன் அப்படி என்ன பேசினீர்கள் எனத் தமது துணைவியாரிடம் மஹிந்தர் பின்னர் கேட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஒரே வாங்கு வாங்கிக் கரித்துக் கொட்டியபடி இருந்தாராம் சந்திரிகா என்று ஷிராந்தி தமது கணவர் மஹிந்தவிடம் கூறினார்.

நம்பகமாக இந்த விடயங்களை அறிய முடிந்தது.

ஒருபுறம் மொட்டு – சு.க. கூட்டில் மஹிந்தருடன் சேர்த்துத் தமக்கு இணைத்தலைவர் பதவி தரவேண்டும், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பொலன்னறுவை மாவட்டத்தில் போட்டியிடும் கூட்டுவேட்பாளர் அணிக்குத் தலைமைப் பொறுப்புத் தனக்கு வழங்கப்படவேண்டும் என்றெல்லாம் நிபந்தனை போடுகின்றாராம் மைத்திரியார்.

இதனால் வெறுத்துப் போய் நின்கின்றது மொட்டு அணித் தலைமை. இவை எதையும் மைத்திரியாருக்கு விட்டுக் கொடுக்கும் மன நிலையில் மொட்டுத் தலைமை இல்லை.

ஆரவாரம் செய்யாமல் – பந்தா, பிகு பண்ணாமல் – மொட்டுக்குப் பின்னால் சு.க. அணி வகுத்து வரவேண்டும், வராவிட்டால் வரப் பண்ணுவோம் என்ற திமிரில் மொட்டுத் தலைமை இருப்பதாகத் தெரிகின்றது.

மொட்டுக் கட்சித் தரப்பாருக்கு 'சூ'க் காட்டுவதற்காக மைத்திரியார் இன்னொரு தந்திரமும் பண்ணுகின்றாராம்.

சத்தம் சந்தடியில்லாமல் சஜித் தரப்புடன் ஓர் இரகசிய 'டீல்' போடுவது போல மொட்டுக் கட்சித் தலைமைக்கு 'பாவ்லா' பண்ணுகின்றாராம். நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறவேண்டும் என்பதற்காக ஆலாய்ப் பறக்கும் மொட்டுத் தலைமை, இப்படி சஜித் – மைத்திரி இரகசிய 'டீல்' நடக்கின்றது எனத் தகவல் கிடைத்ததும் பதறியடித்துக்கொண்டு தன்னிடம் ஓடோடி வரும் என்பது சு.க. தலைவர் மைத்திரியாரின் எண்ணம்; எதிர்பார்ப்பு; நம்பிக்கை எல்லாம். ஆனால் அப்படி மொட்டுத் தலைமையில் பதற்றம் ஏதும் இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

*"தாம் ஜனாதிபதியாக இருக்கும் போதும் – கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் – இப்படி இரட்டை தடத்தில் டீல் பேச முயன்றவர்தான் மைத்திரியார். ஒருபுறம் எங்கள் (மொட்டுக் கட்சியுடன்) உடன்பாடு செய்து கொண்டே மறுபுறம் சஜித்துடனும் இரகசியப் பேச்சு நடத்தியவர்தான். அது எங்களுக்கு அப்போதும் தெரியும். இப்போது நடப்பவையும் தெரியும். அவர் என்ன கூறினாலும் சு.க. விலகிப் போக முடியாது. எங்கள் கூட்டில் நிற்பதை தவிர சு.கவுக்கு வேறு வழியில்லை என்பது தான் நிலைமை. அத்தகைய இக்கட்டில் அக்கட்சி இருப்பதை அக்கட்சியினர் புரிந்துகொள்ளவேண்டும்"*– என்று மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் மிக உறுதியாகவும் , திட்டவட்டமாகவும் கூறினார்.

மொட்டுக் கட்சியின் பிடியிலிருந்து சு.க. விலகமுடியாது. எப்படியாயினும் வரும் பொதுத் தேர்தலில் மொட்டுக் கட்சியின் பட்டியலில் ஒட்டுவதைத் தவிர சு.கவுக்கு வேறு மார்க்கமில்லை.

சு.கவை கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு – உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கட்டத்துக்கு– கொண்டு வந்து சேர்த்திருக்கின்றார் அதன் தற்போதைய தலைவர் மைத்திரிபால சிறிசேன என்று பல தடைவைகள் இப்பத்தியில் நான் சுட்டிக்காட்டியுள்ளேன்.

அந்த இழிநிலையில் இருக்கும் சு.கவுக்கும் அதன் தலைவருக்கும் மொட்டுக் கட்சிக்கு எதிராகக் குதிப்பதற்கு – எழுத்து நின்று அதிக அரசியல் பேசுவதற்கு – வலிமை ஏதும் கிடையாது என்பதுதான் நிலைமை.

சாம, பேத, தான, தண்டம் என்ற எந்த வழியிலேனும் சு.க.வை மடக்கித் தனது வழிக்குக் கொண்டுவரக் கூடிய வலிமையான நிலையில்தான் மொட்டுக் கட்சித் தலைமை உள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் கடந்த 58 மாத ஆட்சிக் காலத்தில் மைத்திரி விட்டுச் சென்ற பல தடங்கள் புதிய ஆட்சிப் பீடத்திடம் துரும்புகளாகச் சிக்கியுள்ளன. அவை போதும் மைத்திரியை வழிக்குக் கொண்டுவர என்பதுதான் மொட்டுக் கட்சியின் வலிமையாகும்.

இந்தப் பின்புலத்தில்தான் ராஜபக்ஷக்களுக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் தற்போது விருத்தியாகும் நல்லுறவு பற்றி புதிய 'கெமிஸ்ட்ரியை' நோக்கவேண்டும் என்கின்றார் முக்கிய அரசியல் விமர்சர் ஒருவர்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் ரீதியில் மோசமானவர் அல்லர், : ஆபத்தானவரல்லர் என்ற கருத்து நிலைப்பாட்டை சந்திரிகா தமக்கு நெருக்கமாக சிலருக்குக் கூறியிருக்கின்றார். அந்தத் தகவல் கோட்டாபய காது வரை எட்டியிருப்பதாகத் தகவல்.

அதனடிப்படையில் உருவாகக்கூடிய புதிய புரிந்துணர்வு, சு.க. தலைமைப் பதவிக்கு மீண்டும் சந்திரிகாவைக் கொண்டு போய் இருத்தும் அளவுக்கு மொட்டுக் கட்சிக்காரர்களால் தந்திரோபாயமாக வகுக்கப்படலாம் என்று ஊகம் தெரிவித்தார் அந்த விமர்சகர்.

வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் தென்னிலங்கை அரசியலில் பல அதிசயங்கள் கட்டவிழலாம். பார்த்திருப்போம்....!

– மின்னல் –

# பிரிவினைக் கோரிக்கையை அரசு நியாயப்படுத்தியுள்ளது

## மனோ கணேசன் விசனம்

கொழும்பு,பெப்.05

"தேசிய சுதந்திர தின நிகழ்வில் சர்வதேச, உள்ளூர் சமூகங்களுக்கு எதிரில் தமிழில் தேசிய கீதத்தை நிராகரித்து, பிரிவினைவாதத்தை நியாயப்படுத்தி, தேசபக்தர்களை அரசாங்கம் ஏமாற்றியுள்ளது. ஓர் இலங்கையனாக வெட்கமும், கவலையும் அடைகிறேன்" – என முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கருமமொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் தனது டுவிட்டர் தளத்தில் கூறியுள்ளார்.

தமது சமூகதள செய்தி பற்றி மேலதிக விளக்கம் கேட்ட போது –இந்த அரசாங்கம் தமிழீழ கோரிக்கையை நியாயப்படுத்தியுள் ளது என்பதை தவிர வேறெதுவும் சொல்ல விரும்பவில்லை என மனோ கணேசன் எம்பி கூறினார்.

"இன்றைய சுதந்திர தின நிகழ்வில், தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படவில்லை. கடந்த ஆட்சியில் 2016 ஆம் ஆண்டு சுதந்திர தின நிகழ்வில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்மொழியிலும் தேசிய கீதத்தை பாடும் வழமை, இவ்வருட சுதந்திர தின நிகழ்வில் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் தமிழில் தேசிய கீதம் பாடப்படுவதை, தேசிய ஒருமைப்பாடு, அரச கருமமொழிகள் விவகார அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவை உபகுழு மூலம் இதனை முன்னெடுத்திருந்தேன்.

இவ்வருட சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் பாடப்படமாட்டாது என்ற செய்தி பரவிய நிலையில் இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்துக்கு பலமுறை கொண்டு வந்தேன் இந்த கடைசி தருணத்திலாவது, நல்ல முடிவை எடுங்கள் என நேற்றும் கேட்டிருந்தேன் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் காலத்தில் கோரப்பட்ட விண்ணப்பங்களை வலுவற்றன்வாக்கி, புதிதாக விண்ணப்பங்களைக் கோருவதற்கான முன்மொழிவை அடுத்து வரும் நாள்களில் இடம்பெறவுள்ள புதிய பேரவையின் முதலாவது கூட்டத்தில் முன்மொழிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய வருகின்றது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காகக் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. விண்ணப்ப முடிவுத்திகதி கடந்த ஒக்ரோபர் மாதம் முடிவடைந்த நிலையில் இரண்டு புலம்பெயர் தமிழ்ப் பேராசிரியர் கள் உட்பட ஒன்பது பேர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் துணைவேந்தர் தேர்தலுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், முன்னாள் துணைவேந்தரும், தற்போதைய விண்ணப்பதாரிகளில் ஒருவருமான பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததை அடுத்து துணைவேந்தர் தெரிவுக்கான பணிகளை கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை ஒத்திவைக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின், துணைவேந்தர் தெரிவுக்கான பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கிய பல்கலைக்கழக நிர்வாகம் முதற்கட்டமாக துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள ஒன்பது பேரினதும் தகுதி, தராதரங்களை ஆராய்வதற்கான மதிப்பீட்டுக் குழுவை கடந்த வருடம் நவம்பர் 30 ஆம் திகதி இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டத்தில் நியமித்ததுடன், துணைவேந்தர் தேர்தலை டிசெம்பர் 28ஆம் திகதி நடத்துவதற்கு திகதியும் குறித்திருந்தது.

இந்த நிலையில், புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் டிசெம்பர் 20 ஆம் திகதி முதல் நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் பேரவைகள் வலுவிழக்கச் செய்யப்பட்டதனால், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவும் இழுபறிக்குள்ளாகியது.

தற்போது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் புதிய தலைவர், உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டமையையடுத்து, பல்கலைக்கழகங்களுக்கான பேரவை உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமியின் பதவிக்காலம் நாளையுடன் நிறைவடையவுள்ள நிலையில் அவருக்கு உயர்கல்வி அமைச்சரால் பதவி நீடிப்பு வழங்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்படும்நிலையில்பதில்துணைவேந்தரை நியமிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் முதுநிலை பீடாதிபதி என்ற அடிப்படையில் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தனை பதில் துணைவேந்தராக நியமிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுப்பதாக அறியமுடிகிறது.

முன்னைய பேரவையினால் யாழ்.பல்கலைக்கழகப் பிரதித் துணைவேந்தர் பதவிக்காகப் பரிந்துரைக்கப்பட்ட பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பேராசிரியர் கு.மிகுந்தன் ஆகியோரில் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா வைப் பிரதித் துணைவேந்தராக நியமிப்பதற்கான அறிவுரையை முன்னைய பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு வழங்கியிருந்த போதிலும் நவம்பர் 26 ஆம் திகதி முதல் புதிய நியமனங்கள் அனைத்தும் ஜனாதிபதியினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# நாயாறு பகுதியில் வாடிகள் தீக்கிரை!

முல்லைத்தீவு, பெப். 05

முல்லைத்தீவு – நாயாறு பகுதியில் நேற்று முன் தினம் இரவு கடற்றொழிலாளர் ஒருவரின் வாடிகள், இனந்தெரியாத 2 நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

நாயாற்றுப்பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர், வாடி அமைத்து புத்தளத்தில் இருந்து வேலைக்கு ஆள்களை வைத்துக் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வாடிகள் இரண்டும், அதில் இருந்த கடற்றொழிலுக்குப் பயன்படும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் எரிந்து சாம்பாராகியுள்ளமையுடன் படகு ஒன்றும் சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## டெனீஸ்வரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையால் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தனது அமைச்சரவையிலிருந்து அமைச்சர் டெனீஸ்வரனை 2017ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24ஆம் திகதி பதவி விலக்குகிறார் என அறிவித்திருந்தார். அதற்கு எதிராக டெனீஸ்வரன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

2018ஆம் ஆண்டு ஜுலை மாதம் நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியது. அவரது பதவி நீக்கம் தவறு என்று கூறியது. இந்த வழக்கு மீதான தீர்ப்பு கடந்த ஆண்டு இறுதியில் வழங்கப்பட்டது. இடைக்காலக் கட்டளையை அது உறுதிப்படுத்தியிருந்தது.

நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலக் கட்டளைக்கு அமைவாக தனது சம்பளத்தை வழங்குமாறு டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபையைக் கோரியிருந்தார். இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டது.

சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக, 2018ஆம் ஆண்டு ஜுலை மாதம் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையிலிருந்து மாகாண சபை கலைக்கப்படும் வரையிலான 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையிலான 4 மாதங்களுக்குரிய சம்பளத்தை வழங்க சட்டமா அதிபர் அறிவுறுத்தியிருந்தார்.

நான்கு மாதங்களுக்கும் 7 இலட்சத்து 21 ஆயிரத்து 797 ரூபா 27 சதம் அவருக்கு வழங்கப்பட வேண்டியிருந்தது. டெனீஸ்வரன் அமைச்சரவையிலிருந்து விலகியபோது கைத்தொலைபேசி மற்றும் மடிக்கணினி என்பவற்றை ஒப்படைக்கவில்லை.

அதற்குரிய பெறுமதியை வழங்குவதாக டெனீஸ்வரன் தெரிவித்தமைக்கு அமைவாக ஒரு லட்சத்து 97 ஆயிரத்து 950 ரூபா கழிக்கப்பட்டு எஞ்சிய 5 லட்சத்து 23 ஆயிரத்து 847 ரூபா 27 சதம் அவரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

எஞ்சிய மாதங்களுக்கான கொடுப்பனவைக் கோரி மாகாண சபைக்கு விண்ணப்பிக்கவுள்ளார் எனத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன், தனது ஆளணியினருக்கான கொடுப்பனவையும் கோரவுள்ளார் எனக் குறிப்பிட்டார்.

எனது அமைச்சுப் பதவியை பகிர்ந்து கொண்டிருந்த முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், முன்னாள் அமைச்சர் க.சிவநேசன் ஆகியோரிடமிருந்து அந்தப் பணத்தை மாகாண சபை மீள அறவிட வேண்டும் என்றும் டெனீஸ்வரன் வலியுறுத்தினார். (ஐ)

## இராணுவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிவில் உடையில், இருந்தபோதும், இராணுவப் பதக்கங்களை அணிந்திருந்தார்.

ஜனாதிபதி ஒருவர் இவ்வாறு இராணுவப் பதக்கங்களை அணிந்து சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.(ஐ)

## இராட்சதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் இராட்சதக் கணவாய் ஒன்றைப் பிடித்துள்ளார்.

பிடிக்கப்பட்ட கணவாய், 12 கிலோ 250 கிராம் எடை கொண்டதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தளவு நிறை கொண்ட கணவாய் பிடிபட்டமை, இதுவே முதல் தடவை என அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாகப் பிரிந்து இரண்டு போராட்டங்களை முன்னெடுத்தனர்.

'காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்ட நாட்டில் சுந்திர தினம் எதற்கு?', 'பதில் கூறு! பதில் கூறு!காணாமல் ஆக்கப்பட்ட உறவுக்களுக்கு பதில் கூறு!', 'சர்வதேச நீதிமன்றில் இலங்கை அரசை நிறுத்து', 'எங்களுக்குச்சர்வதேசவிசாரணையே தேவை' – போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்னாள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா மற்றும் கிளிநொச்சி தமிழரசுக் கட்சியினர் ஒரு புறமாகப் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதேவேளை, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திர குமார் பொன்னம்பலம், கஜேந்திரன், சுகாஷ், மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொண்ட அணி இன்னொரு புறமாக கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு 'பெப்ரவரி 4 சிறிலங்காவுக்கு சுதந்திர நாள், அது தமிழ் மக்களுக்கு கரிநாள்', 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உள்ளக விசாரணை மூலம் நீதி கிடைக்காது', 'நாட்டின் சுதந்திரம் சிங்களவருக்கு மட்டும்தானா?' – போன்ற வாசகங்களுடன் ஆலயத்தின் முன் பகுதியின் வலது பக்கமாகப் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். பின்னர் இவர்கள் அங்கிருந்து புறப்பட்டு டிப்போ சந்தி வரை ஊர்வலமாகச் சென்றனர்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்துகொண்ட போராட்டத் தரப்பினர் ஆலய முன்றிலில் நின்றவாறே தங்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ஐ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களித்து தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசு இம்முறை, சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைப்பதை அனுமதிக்கவில்லை.

இது பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது. எனினும், அரசு அசைந்து கொடுக்கவில்லை.

இந்த நிலையில் கொழும்பில் மூவின மக்களையும் சேர்ந்த இளையவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், மதகுருமார் இணைந்து, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தேசிய கீதத்தை இசைத்தனர்.

பொரளை, கனத்தை சுற்றுவட்டாரத்துக்கு அருகில் நேற்றுக் காலையில் ஒன்று கூடியவர்கள் இரண்டு மொழிகளிலும் தேசிய கீதத்தை இசைத்தனர். (ஐ)

## தனக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் 72ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைக் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார். இருப்பினும் நாம் கலந்துகொள்ளவில்லை.

தமிழர்களையும், தமிழ் மொழியையும் புறக்கணிக்கும் அவர்களின் செயற்பாடுகளை நாம் ஆதரிக்க முடியாது. இதன் காரணமாக தேசிய சுதந்திர தின நிகழ்வில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் தேசிய சுதந்திர தின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பங்கேற்குமாறு ஜனாதிபதி அலுவலகம் அழைப்பு விடுத்திருந்தது. இது தொடர்பில் நாம் ஆராய்ந்தோம்.

2015 ஆம் ஆண்டிலிருந்து சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொயிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்தது. இம்முறை சிங்கள மொழியில் மாத்திரம் இசைக்கப்படும் என்று கோட்டாபய அரசு கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. அதனால் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களைப் புறக்கணிக்கும் வகையிலேயே கோட்டாபய தலைமையிலான அரசு செயற்படுகின்றது. ஜனாதிபதி தேர்தலில் தனக்கு வாக்களிக்காத தமிழ் மக்களைப் பழிவாங்கும் வகையிலேயே அவர் செயற்படுகின்றார். இந்தக் காரணங்களால் இன்றைய சுதந்திர தின நிகழ்வைப் புறக்கணித்துள்ளோம்– என்றார். (ஐ)

## யாழ்.பல்கலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்பாகக் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

கறுப்பு கொடிகளுடன் பதாதை ஒன்றும் கட்டப்பட்டிருந்தது.

– போர்க்குற்றங்களுக்கு இலங்கை பொறுப்புக் கூறும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு மாற்றப்பட்டு அதன் ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தல் வேண்டும்.

– கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

– வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உள்ளக விசாரணை மூலம் நீதி கிடைக்காது!

உள்ளிட்ட வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதையே கட்டப்பட்டிருந்தது. (ஐ-07)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஜனாதிபதியின் சுதந்திர தின உரை

தாம் ஜனாதிபதியான பின்னர் தமது முதலாவது சுதந்திர தின உரையை ஆற்றியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

ஏதோ ஜனநாயத்தினதும், சமத்துவம், சமாதானத்தினதும் காவலர் தாமே என்பது போல அவரின் உரை அமைந்திருக்கின்றது.

இந்த உரையை செவிமடுக்கும் போது ஒரு முக்கிய விடயம் நினைவுக்கு வருகின்றது.

தமது சகோதரர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக முன்நிறுத்தப்பட்டமையால் பெரு வெற்றியீட்டி, இந்தப் பதவியை எட்டியிருக்கின்றார் கோட்டாபய. ஆனால் ஒரு விடயத்தில் இருவரும் எதிரும் புதிருமானவர்களாக – தலைகீழ் போக்குடையவர்களாக – தென்படுகின்றனர்.

1990களின் ஆரம்பத்தில் – ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் – அராஜகம் தலை விரித்தடிய போது மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து, மனித உரிமைகள் போராளி போல செயற்பட்டவர் மஹிந்த ராஜபக்ஷ.

பின்னர் 2005 இறுதியில் அவரே இந்த நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான போது அவரே சர்வாதிகாரி போலானார். அவரது ஆட்சியில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டன. அராஜகம் கட்டு மீறியது. அடாவடித்தனமே ஆட்சி முறையாகக் கட்டவிழ்ந்தது.

மனித உரிமைப் போராளி, அராஜக ஆட்சிக் கால சர்வாதிகாரியாக மாறியமையை அங்கு கண்டோம்.

இப்போது நடப்பது தலைகீழ் விடயம் போல தோற்றுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நடந்த பல அத்துமீறல்கள், அராஜங்கள், அடாவடித்தனங்களின் ஊற்றுக் கண்ணாக இருந்ததே பாதுகாப்பு அமைச்சுத்தான். அப்போது அந்தப் பாதுகாப்பு அமைச்சினதும் அதன் கீழ் அராஜகம் புரிந்த படைகளினதும் மீகாமன் கோட்டாபய ராஜபக்ஷவே. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நடந்த அத்தனை அத்துமீறல்களினதும் ஊற்றுக்கண் கோட்டாவிடம் இருந்துதான் ஆரம்பித்தது என்பது திண்ணம்.

அவரை ஓர் ஈவு இரக்கமற்ற தீவிர யுத்தத் தலைவராக உலகம் பார்த்தது. பார்த்தது என்பதல்ல. அதனையும் தாண்டிப் பயந்து நடுங்கியது.

அத்தகையவர் இன்று ஜனாதிபதியாகிய பின்னர் தம்மை மனித உரிமைக் காவலர் போல் காட்டி உரை நிகழ்த்துகின்றார்.

மனித உரிமைவாதி ஒருவர் காலக்கிரமத்தில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் மோசமானவராக மாறியமையை 2005 – 2015 இல் இலங்கை கண்டது.

இப்போது 2020 இல், இதுவரை மிக மோசமானவராக – மூர்க்கமானவராக – அடையாளம் காணப்பட்டவர் – இப்போது ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் மனித உரிமைவாதி போல தம்மைக் காட்டிக் கொள்ளும் அதிசயத்தைக் காண்கிறோம்.

இது கூடக் கபட வேடதாரித் தோற்றமா? சாத்தான் வேதம் ஓதும் பண்பியல்பா? உருத்திராட்சப் பூனை வேடமா?

*“இலங்கை ஒற்றையாட்சி நாடு. பௌத்தத்தை வளர்ப்பதும் பேணுவதும் எனது பணி”* என்று தமது சுதந்திர தின உரையில் அவர் கூறுவது அப்படி ஒன்றும் புதுமையான விடயமல்ல. எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. தம்மை ஜனாதிபதியாக்கிய தமது பௌத்த, சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவும், தமக்கு வாக்களித்தமைக்கு நன்றி தெரிவிக்கவும் அவர் அப்படித்தான் பேசுவார்; பேச வேண்டும்; பேசுகின்றார். அதில் புதுமையில்லை.

ஆனால் *“இலங்கையில் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாகவும், பாதுகாப்போடும் வாழும் உரிமையுண்டு. அவர்களது சுதந்திரமாகச் சிந்திக்கும் உரிமையையும், சுயாதீனமாக அபிப்பிராயம் கொள்ளும் உரிமையையும், கருத்துக்களை தெரிவிக்கும் உரிமையையும் நாம் எப்போதும் மதிக்கிறோம். எந்தவொரு பிரஜைக்கும் தான் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கான உரிமையை எப்போதும் மதிப்போம். ஒன்று கூடல் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் யாவற்றையும் பாதுகாப்போம். மனித உரிமைகளைப் பேணுவோம். ஜனநாயகத்தை சீரான முறையில் நடைமுறைப்படுத்துவோம். சட்ட வாக்கத் துறை, நீதித்துறை ஆகியவற்றின் தனித்துவத்தைப் பேணுவோம்”* என்ற சாரப்படவெல்லாம் அவர் ஆற்றிய சுதந்திர தின உரையை செவிமடுக்கும் போது உடல் புல்லரிக்கின்றது.

அவற்றை அவர் செயலில் காட்டுவாரா? அல்லது அவை வெறும் வாய்ப் பேச்சுத்தானா? என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த நாட்டில் இருப்பவர் – இல்லாதவர், வசதியுள்ளவர்கள் – வசதியற்றவர்கள் என்ற வேறுபாடுகள் இருப்பதை அவர் ஒப்புக் கொள்கின்றார். கல்வி வசதி சமநிலையில் இல்லை. சுகாதார வசதிகள் சமச்சீராக இல்லை. தொழில் வாய்ப்புக்கள் சம அளவில் கிட்டவில்லை – என்றெல்லாம் அடுக்கும் அவர், ஆனால் இந்த வேறுபாடுகள், வித்தியாசங்கள் எவையும் இன ரீதியானவையோ அல்லது மத ரீதியானவையோ அல்ல என்றும் அவை நாட்டின் பொதுப் பிரச்சினை என்றும், கூறுகின்றார்.

அதாவது, இந்த நாட்டில் இனப் பிரச்சினை, மதப் பிரச்சினை என்று ஏதும் இல்லை என்பதும், பொருளாதாரம் ஏற்றத் தாழ்வுகள், அபிவிருத்தியின்மையும் மட்டுமே பிரச்சினைகள் என்பதுமே அவரது நிலைப்பாடாக உள்ளன போலும்.

அவரின் இந்தக் கருத்து, இந்த இலங்கைத் தீவில் எழுபது ஆண்டுகளுக்கு மேல் புரையோடிப் போய்க் கிடக்கும் தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் உருப்படியான பார்வையும், தெளிவான தரிசனமும் அவருக்குக் கிடையாது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

அவர் எவ்வளவுதான் உயர்ந்த அரசியல் தத்துவங்கள் பேசினாலும், இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள முடியாதவரால் அதற்கு ஓர் உருப்படியான தீர்வைத் தர முடியாது என்பதே உண்மை.

# அரைச் சொகுசு பஸ்கள் கதி என்ன? இவ்வார இறுதியில் அறிக்கை வரும்

கொழும்பு, பெப். 05

அரை சொகுசு பஸ் சேவையைத் தொடர்வது அவசியமானதா என்பது குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடத்திய ஆய்வு, இந்த வார இறுதியில் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் ஒப்படைக்கப்படும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

அரை சொகுசு பஸ் சேவையை நிறுத்துவது குறித்து அமைச்சர் கவனம் செலுத்தியிருந்தார்.

சுமார் 400 அரைச் சொகுநு பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. சேவையை நிறுத்துவதற்கு முன், அந்த பஸ்களை பயன்படுத்தும் மாற்று வழிகளைக் கருத்தில் கொள்வது பொருத்தமானது என்று அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அரைச் சொகுசு பஸ் சேவை நிறுத்தப்பட்டால் பேச்சுகளை நடத்தவும், மாற்று வழிகள் குறித்தும், பஸ்களை எவ்வாறு ஒதுக்கவேண்டும் என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரைச் சொகுசு பஸ் சர்ச்சை தீவிரமாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை, கடந்த சனிக்கிழமை மேலும் ஒரு விவகாரம் சர்ச்சையாகியிருந்தது.

கடந்த சனிக்கிழமை நுவரெலியாவிலிருந்து கொழும்புக்கு பயணித்த பயணிகளிடம், அரைச் சொகுசு எனக் குறிப்பிட்டு பஸ் ஒன்று அதிக பணம் வசூலித்துள்ளது. இது குறித்து சர்ச்சை எழுந்ததும், உடனடி அறிக்கை சமர்ப்பிக்கும்படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு, அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவிட்டிருந்தார்.

இந்த பஸ் சாதாரண சேவை வகையைச் சேர்ந்தது. நுவரெலியா மற்றும் கொழும்பு இடையே இயக்க தற்காலிக பாதை அனுமதி வழங்கப்பட்டது. ஒரு சாதாரண பஸ் கம்பளையிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகளிடமிருந்து 185 ரூபா வசூலிக்கிறது.

இருப்பினும், இந்த பஸ்ஸில் 278 ரூபா கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது, இது அரைச் சொகுசு சேவையின் கட்டணம் என்று கூறப்படுகிறது என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சாதாரண சேவை பஸ்ஸில் பேராதனையிலிருந்து கொழும்புக்குப் பயணிக்கும் பயணிகளிடமிருந்து 175 ரூபா வசூலிக்கப்படுகிறது. இந்த பஸ் 251 ரூபா வசூலித்தது. இந்த பஸ் கடுமையான தவறு செய்துள்ளது என்று அமைச்சர் கூறினார்.

எனவே, பஸ்ஸின் வழி அனுமதியை இரத்துச் செய்வதற்கு முன் உடனடியாக அறிக்கை அளிக்குமாறு அமைச்சர் கோரியிருந்தார். அத்துடன், சாதாரண சேவை பஸ்ஸுக்கு அரைச் சொகுசு சேவை வழி அனுமதி வழங்கிய பொறுப்புள்ள நபரைக் கண்டுபிடிக்கவும் அமைச்சர் அறிவுறுத்தினார். (ஐ)

# மட்டு. மாவட்ட செயலகத்தில் நேற்று சுதந்திர தின நிகழ்வு!







மட்டக்களப்பு, பெப். 05

இலங்கை சோலிச ஜனநாயகக் குடியரசின் 72 ஆவது சுதந்திர தின நிகழ்வு மட்டக்களப்பிலும் கொண்டாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலர் கலாமதி பத்மராஜா தலைமையில் முப்படைகளின் அனுசரனையுடன் மட்டக்களப்பு வெபர் அரங்கில் இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது தேசியக் கொடியை ஏற்றி, இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைத்து நான்கு மதங்களைப் பிரதிபலிக்கின்ற மதகுருமாரின் ஆசியுடன் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விமானப் படையின் இணைப்பதிகாரி, மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர், உதவி மாவட்ட செயலாளர், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக உத்தியோத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியாவிலும் நேற்று ஆறு கைதிகள் விடுதலை

வவுனியா, பெப். 05

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையிலிருந்து ஆறு கைதிகள் பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில்இருந்து 512 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா சிறைச்சாலையிலிருந்தும் சிறுகுற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்ட 6 கைதிகள் விடுவிக்கப்பட்டனர். (ஐ)



**நாளை 06.02.2020 - வியாழக்கிழமை**

நட்சத்திரம்: திருவாதிரை மரண மு.இ. 11.25 வரை இராகுகாலம் : 02.05 – 03.35
திதி : துவாதசி மாலை 06.04 வரை சுப நேரம் : 08.05 – 09.35

# மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.05

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலை, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், சுப்பர்மடம் மரின் வெல்த் ஐஸ் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, வெங்கடேஸ்வரர் ரேடிங் பிறைவேற் லிமிற்றெட், Noble Int Papers Lanka (Pvt) Ltd> Union Enterprise Ever shine Amana Roofing, Sarah Industries (Pvt) Ltd ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

மல்லாவியிலிருந்து கல்விளான் வரை, துணுக்காயிலிருந்து தெனியங்குளம் வரை, பிள்ளையார் அரிசி ஆலை, ஆலங்குளம் இராணுவ முகாம், 653ம் படைப்பிரிவு இராணுவ முகாம், வன்னி வைரம், மொடர்ன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்–

**வவுனியாப்பிரதேசத்தில் -**

புதுக்குளம் கோவில்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், கந்தசாமிநகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், செட்டிகுளம், புளியங்குளம், காந்திநகர், அரசடிகுளம், நாகரிலுப்பைக்குளம், பொன்னாவரசங்குளம், அறுகம்புல்வெளி, அவுசதப்பிடடி ஆகிய இடங்களிலும் –

**மன்னார்ப்பிரதேசத்தில் -**

சிலாவத்துறை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறி வித்துள்ளார்.

# அலுவலகத்துக்குள் புகுந்த நாகம்; அலறியடித்து ஓடினர் ஊழியர்கள்!

அம்பாறை, பெப். 05

அம்பாறை மாவட்டம் சவளக்கடை கமநல சேவைகள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் மதியம் புகுந்த நாக பாம்பினால், அலுவலக ஊழியர்கள் பதற்றமடைந்து ஓடினர். அங்கு வேலை செய்யும் பெண் உத்தியோகத்தர் ஒருவர், பாம்பு ஊர்வதைக் கண்டு கூக்குரலிட்டுள்ளார்.

சக உத்தியோகத்தர்கள் அந்த நாகபாம்பை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் அரை மணி நேரமாக அந்த பாம்பு அலுவலகத்தில் பதுங்கி அராஜகம் செய்த பின்னர், அருகில் உள்ள வயல் வெளிக்குள் நகர்ந்து சென்றுள்ளது. (ஐ)

# மக்கள் தீர்மானிக்கும் சின்னத்தில் போட்டி!

## கூறுகின்றார் பஸில்



கொழும்பு, பெப். 05

மக்கள் தீர்மானிக்கும் சின்னத்தின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் நிறுவுனர் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றிருந்த பஸில் ராஜபக்ஷ சுமார் 3 மாதங்களின் பின்னர் நேற்று முன் தினம் நாடு திரும்பினார். இதையடுத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர்,

மார்ச் மாதத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பத்தில் கூறியுள்ளனர். மக்களுக்கான பணிகளை இந்த அரசு நிறைவேற்றுவதற்கு பெரும்பான்மையைக் கொண்ட ஒரு வலுவான நாடாளுமன்றம் அவசியம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியை இணைத்து பொதுஜன பெரமுன போட்டியிட்ட நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற, பொருத்தமான சின்னம் பயன்படுத்தப்படும் – என்றார். (ஐ)

# ஆற்றுக்குள் பாய்ந்தது பஸ்!

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குப் பயணித்த சொகுசு பஸ்ஸொன்று பாதையை விட்டு விலகி ஆற்றுக்குக்குள் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் பலத்த காயமடைந்துள்ளனர். அவர்கள் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

34, 56 மற்றும் 26 வயதுடைய மூவரே காயங்களுக்கு உள்ளாகியுள்ளனரெனவும் கந்தளாய் பொலிஸார் கூறினர்.

கந்தளாய் 87 வளைவுப் பகுதியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே இந்த விபத்துக்குப் பிரதான காரணமென ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து அறியமுடிகின்றதெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# கொழும்பில்தான் போட்டி: அடம் பிடிக்கிறார் ரணில்!



கொழும்பு, பெப். 05

ஐக்கிய தேசியக் கட்சியின் தலை வர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடாது தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு வருமாறு அவரது ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் அதனைப் பொருட்படுத்தாது அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்ற அரசியல்வாதிகளில் ரணில் விக்கிரமசிங்க இருந்து வருகிறார். கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவர் 5 லட்சத்து 566 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார்.

எனினும் 2020 ஆம் ஆண்டாகும் போது கட்சிக்குள் ஏற்பட்ட நிலைமைகளுக்கு அமைய அவரது பிரபலம் குறைந்து போயுள்ளது. இதனால் இம்முறை ரணில் விக்கிரமசிங்க தனது விருப்பு வாக்குச் சாதனைக்கு அருகில் கூட வர முடியாது எனவும் அவர் கடந்த முறையுடன் ஒப்பிடும் போது குறைந்த விருப்பு வாக்குகளையே பெற முடியும் எனவும் கூறப்படுகிறது.

இதன் காரணமாக தனது விருப்பு வாக்குச் சாதனை பாதுகாத்து இம் முறை பொதுத் தேர்தலில் போட்டியிடாது தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு வருமாறு ரணில் விக்கி ரமசிங்கவுக்கு நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனினும் தனது வழமையான பிடிவாத கொள்கையில் எவர் கூறுவதையும் கேட்காது மீண்டும் கொழும்பில் போட்டி யிடத் தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# மீண்டும் டெல்லியில் ஆம் ஆத்மிய ஆட்சி?

## கருத்து கணிப்புத் தெரிவிப்பு



டெல்லி, பெப.05

டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி 54 முதல் 60 இடங்களையும், பா.ஜ.க. 10 முதல் 14 இடங்களையும் கைப்பற்றக்கூடும் என்று கருத்து கணிப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'டைம்ஸ் நவ் தொலைக் காட்சி', 'களநிலவர ஆய்வு அமைப்பு' Ipsos ஆகியவை இணைந்துகருத்துக்கணிப்பு நடத்தி முடிவை வெளியிட்டுள்ளன.

அதில் ஆம் ஆத்மி 54 முதல் 60 இடங்களையும், பா.ஜ.க. 10 முதல் 14 இடங்களையும், காங்கிரஸ் 2 இடங்களையும் கைப்பற்றக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆம் ஆத்மிக்கு 52 சத வீத வாக்குகள், பா.ஜ.கவுக்கு 34 சதவீத வாக்குகள், காங்கிரஸுக்கு 4 சதவீத வாக்குகள் கிடைக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கல்லூரியின் விரிவுரையாளர் உயிருடன் தீ வைத்து எரிப்பு!

## மகாராஷ்டிராவில் அதிர்ச்சிச் சம்பவம்

மகாராஷ்டிராவில் கல்லூரி விரிவுரையாளர் ஒருவர் உயிருடன் எரிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வர்தா மாவட்டம் ஹிங்கன்காட்டில் (Hinganghat) உள்ள தனியார் கல்லூரியில் அந்தப் பெண் பணியாற்றி வந்தார்.

நேற்று முன்தினம் காலை கல்லூரிக்குச் சென்றபோது, வழிமறித்த இளைஞன் ஒருவன் மண்ணெண்ணெயை ஊற்றித் தீவைத்துள்ளான்.

தீப்பற்றியதால் அலறித் துடித்த அந்தப் பெண்ணை அருகில் இருந்தவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். பின்னர், மேல்சிகிச்சைக்காக நாக்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அந்தப் பெண் அனுமதிக்கப்பட்டார்.

40 சதவீத தீக்காயங்கள் இருப்பதாகவும், தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். ஒருதலைக் காதல் விவகாரத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என கூறப்படுகிறது. இதுதொடர்பாக விக்கி நாக்ரேல் (Vicky Nagrale) என்பவனை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 3ஆவது நபருக்கும் பாதிப்பு

# கேரளாவில் கொரோனா வைரஸ் 'மாநிலப் பேரிடர்' என அறிவிப்பு!

திருவனந்தபுரம், பெப்.05

கேரளாவில் நேற்று முன்தினம் மூன்றாவது நபர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உள்ளமை உறுதி செய்யப்பட்டதும் மாநில அரசு இந்த விடயத்தை நேற்று மாநிலப் பேரிடர் என்று அறிவித்தது.

கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு



உயிரிழந்தோர் எண்ணிக்கை 426 ஆக உயர்ந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக சீன அரசு அறிவித்துள்ளது.

கேரளாவில் நேற்று 3 ஆவது நபர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உள்ளமை உறுதி செய்யப்பட்டதும் மாநில அரசு இதனை "மாநிலப் பேரிடர் என்று அறிவித்தது. மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் தலைமைச் செயலாளர் டாம் ஜோஸ் இதனை அறிவித்தார்.

கேரளாவில் உள்ள மூன்று கொரோனா வைரஸ் நோயாளிகளும் கடந்த மாதம் சீனாவின் வுகான் நகரிலிருந்து திரும்பிய மாணவர்கள் ஆவார்கள். இவர்கள் வடக்கு கேரளாவின் காசர்கோடு, மத்திய கேரளாவின் திருச்சூர் மற்றும் தெற்கு கேரளாவின் ஆலப்புழா ஆகிய மூன்று வெவ்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸால் ஏற்பட்ட கொடிய நோய்க்கு எதிரான போராட்டத்தில் கேரளா அரசு சுகாதார துறையை முடுக்கிவிட்டுள்ளது. இதற்கிடையில் வைரஸ் பரவுவதை தடுப்பது குறித்து ஆய்வு செய்ய பிரதமர் நரேந்திர மோடியின் அறிவுறுத்தலின் பேரில் உயர் மட்ட அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 28 தனி வார்டுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. பணிகளுக்காக 40,000 க்கும் மேற்பட்ட சுகாதார அதிகாரிகள், அரசு ஊழியர்கள், கீழ் நிலை ஊழியர்கள் தயாராக உள்ளனர்.

கடந்த மூன்று நாள்களில், மூன்று கொரோனா வைரஸ் நோயாளிகளுடன் உறுதிபடுத்தப்பட்டு தனிமைபடுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும் எண்பதுக்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனைகள் மற்றும் தனிமை வார்டுகளில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மாநிலம் முழுவதும் 2,239 க்கும் மேற்பட்டோர் கண்காணிப்பில் உள்ளனர். அவர்களில் 75 பேர் தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளில் உள்ளனர். மீதமுள்ளவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

புனேவின் தேசிய வைராலஜி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட 140 மாதிரிகளில், 46 மாதிரிகள் எதிர்மறையாக முடிவுகளைக் கொடுத்து உள்ளன.

# தஞ்சை பெரிய கோவிலில் இன்று குடமுழுக்கு பலத்த பாதுகாப்புடன்

தஞ்சை பெரிய கோவிலில் இன்று குடமுழுக்கு விழா நடைபெறுவதை முன்னிட்டு பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு பகுதிகளில் இருந்து பொதுமக்கள் திரள்வதால் நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

தஞ்சை பெரிய கோவிலில் இன்று காலை 9 மணி முதல் 10 மணிக்குள் குடமுழுக்கு நடைபெற இருக்கிறது. இதற்கான பூர்வாங்க பூஜைகள் கடந்தமாதம் 27 ஆம் திகதி தொடங்கிய நிலையில், யாக சாலை பூஜைகள் கடந்த முதலாம் திகதி மாலை தொடங்கியது. நேற்று முன்தினன் 5 ஆம் கால யாகசாலை பூஜை நடைபெற்ற நிலையில், அதனைக் காண திரளான பக்தர்கள் வருகை தந்திருந்தனர்.

நேற்றுக் கோவிலில் காலை 6 ஆம் கால யாக சாலை பூஜையும், மாலையில் 7 ஆம் கால யாக சாலை பூஜையும் நடைபெற்றன.

யாகசாலை பூஜையினை காண வரும் பக்தர்கள் மெட்டல் டிடெக்டர் மற்றும் ஸ்கானர் கருவி மூலம் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே பூஜை நடைபெறும் இடங்களுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

கோவிலை சுற்றி 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், நகர் முழுவதும் சுமார் 5 ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு பகுதியில் இருந்து பக்தர்கள் வருவதற்கு ஏதுவாக 250க்கும் மேற்பட்ட சிறப்பு பஸ்கள் மற்றும் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

# மறிக்க நிற்காத காரின் மீதேறிய காவலரை 2 கிலோ மீற்றர் தூரம் இழுத்து சென்ற கார்

டெல்லியில் வாகன வழி மறிப்பு சோதனையின் போது நிற்காமல் சென்ற காரின் மீது ஏறிய போக்குவரத்துக் காவலர், 2 கி.மீ தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்ட வீடியோ இரு மாதங்களுக்கு பின்னர் வைரலாகியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸார், அவ்வழியாக வந்த காரை நிறுத்த முயன்ற போது லேசாக வேகத்தை குறைத்த அதன் சாரதி பின்னர் வேகத்தைக் கூட்டித் தப்ப முயன்றுள்ளார்.

அவரை மடக்கிப் பிடிக்கும் நோக்கில் போக்குவரத்துக் காவலர் சுனில் காரின் முன்பக்கத்தில் ஏறிய போதும், காரை நிறுத்தாத சாரதி சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் வரை ஓட்டிச் சென்று காவலர் கெஞ்சிய பின்னர் இறக்கிவிட்டுச் சென்றுள்ளார்.

அதனைக் காரினுள்ளிருந்த மற்றொருவர் செல்போனில் படம்பிடித்த வீடியோ இரு மாதங்களுக்கு பின்பு தற்போது வைரலான நிலையில், அது குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

# சுவாமி நித்திக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்துச் செய்வதா?

## கர்நாடக உயர்நீதிமன்று இன்று முடிவு

பெங்களூரு,பெப்.05

கர்நாடக உயர் நீதிமன்றத்தில் சுவாமி நித்தியானந்தாவின் பிணயை ரத்துச் செய்யக் கோரும் மனு மீது இன்று (புதன்கிழமை) தீர்ப்பு வழங்கப்பட உள்ளது.

பெங்களூரு அருகே பிடதியில் நித்தியானந்தா சாமியாரின் தியான பீட ஆசிரமம் அமைந்துள்ளது. அவருக்கு இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் கிளைகள் உள்ளன. இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பாலியல் முறைப்பாட்டில் நித்தியானந்தா கைது செய்யப்பட்டார். அவருக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் பிணை வழங்கி உத்தரவிட்டது. அதன் பிறகு அவர் வழக்கின் விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இதையடுத்து லெனின் கருப்பன் என்பவர் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்து, நித்தியானந்தாவுக்கு வழங்கப்பட்டுள்ள பிணையை ரத்துச் செய்யக் கோரியிருந்தார். அந்த மனு மீது விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் விளக்கம் அளிக்கும்படி நித்தியானந்தாவுக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ்ஸ் அனுப்பியது.

இந்த நிலையில் அந்த மனு நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் நீதிபதி ஜான் மைக்கேல் குன்ஹா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பு சட்டத்தரணி நித்தியானந்தாவுக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ் அவரது தியான பீடத்தில் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தனர். இறுதி விசாரணை முடிவடைந்ததை அடுத்து இந்த வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படும் என்று நீதிபதி அறிவித்தார்.

நித்தியானந்தா தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக உள்ளார். அவரை கைது செய்து அழைத்து



வர 'புளு' கார்னர் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தீவிரவாதிகள் வெறியாட்டத்தில் புர்கினோ பாசோவில் 20 பேர் பலி

வாகடுகு,பெப்.05

புர்கினோ பாசோவில் கிராமத்துக்குள் புகுந்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 20 பேர் பலியாகினர்.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான புர்கினோ பாசோவில் சமீப காலமாக பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக அந்த நாட்டின் வடக்கு,கிழக்கு பகுதியில் அமைந்துள்ள சாகேல் பிராந்தியத்தில் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகப் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் சாகேல் பிராந்தியத்தின் தலைநகர் டோரி அருகே உள்ள பானி என்ற கிராமத்துக்குள் ஞாயிறு இரவு தீவிரவாதிகள் புகுந்து திடீர் தாக்குதல் நடத்தினர். துப்பாக்கிகளுடன் மோட்டார் சைக்கிள்களில் வந்த தீவிரவாதிகள் கண்ணில் பட்டவர்களையெல்லாம் குருவியை சுடுவது போல சுட்டுத்தள்ளினர்.

மேலும் வீடுகளுக்குள் இருந்தவர்களைத் தரதரவென இழுத்து வந்து வீதியில் தள்ளியும் சுட்டுக்கொன்றனர்.

இந்தக் கொடூர தாக்குதலில் பெண்கள் உள்பட 20 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்தத்தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

இதேபோல் கடந்த வாரம் சாகேல் பிராந்தியத்தின் சில்காட்ஜி நகரில் உள்ள சந்தை பகுதிக்குள் புகுந்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 39 பேர் கொன்று குவிக்கப்பட்டமை நினைவுகூரத்தக்கது.

## கார் பந்தாடியதில் நான்கு சிறுவர் பலி

### சிட்னியில் நடந்த கோர விபத்து



ஆஸ்திரேலியாவில் கூட்டத்துக்குள் கார் புகுந்து ஏற்பட்ட விபத்தில்சிக்கிசிறுவர், சிறுமிகள் உள்பட 4 பேர் பரிதாபமாக பலியாகினர்.

ஆஸ்திரேலியாவில்நியூசவுத் வேல்ஸ் மாகாணத்தின் தலைநகர் சிட்னியில் உள்ள ஒரு வீதியில் சாலையோர நடைபாதை மீது சிறுவர், சிறுமிகள் 7 பேர் நடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்கள் ஐஸ்கிரீம் வாங்குவதற்காக கடைக்கு சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, அந்த சாலையில் அதிவேகத்தில் வந்த கார் ஒன்று நடைபாதை மீது ஏறி சிறுவர், சிறுமிகள் கூட்டத்துக்குள் பாய்ந்தது. இதில் அவர்கள் தூக்கி வீசப்பட்டனர். இதில் 8 முதல் 12 வயதுக்குட்பட்ட 3 சிறுமிகளும், 13 வயதுச் சிறுவனும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

இவர்களில் ஒரு சிறுவனும், 2 சிறுமிகளும் சகோதர, சகோதரிகள் ஆவார்கள். மற்றொரு சிறுமி அவர்களின் உறவுக்காரர் ஆவார். மேலும் இந்த விபத்தில் 2 சிறுமிகளும், ஒரு சிறுவனும் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

விபத்தை ஏற்படுத்திய கார் சாரதியைப் பொலிசார் மடக்கிப் பிடித்தனர். அப்போது அவர் அளவுக்கு அதிகமான மது போதையில் இருந்தமை தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து, பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

## வெட்டுக்கிளிகள் படையெடுப்பு சோமாலியாவில் அவசரநிலை



மொகாதிசு,பெப்.05

சோமாலியாவில் வெட்டுக்கிளிகளால் பேரழிவு ஏற்பட்டுள்ளதால் அங்கு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

நடிகர் சூர்யா நடிப்பில் வெளியான 'காப்பான்' என்ற படத்தில் தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டங்களில் விவசாயத்தை அழிக்க பெருநிறுவனம் ஒன்று வெட்டுக்கிளிகளை ஏவி விடும்.

அண்மையில் குஜராத் மாநிலத்தில் லட்சக் கணக்கான வெட்டுக்கிளிகள் படையெடுத்து விவசாய நிலத்தை அளித்தன. அப்போது அந்த வெட்டுக்கிளிகள் பாகிஸ்தானால் அனுப்பப்பட்டவை என குற்றம் சாட்டினர்.

இந்தநிலையில் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் இதுவரை இல்லாத அளவுக்கு வெட்டுக்கிளிகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

அந்த வகையில் சோமாலியாவில் லட்சக் கணக்கான வெட்டுக்கிளிகள் படையெடுத்து உள்ளன. இவை விவசாய பயிர்களை தாக்கிப் பேரழிவை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக அந்த நாட்டின் ஜூபா நதியின் படுகையில் செழிப்பாக வளர்ந்து நிற்கும் பயிர்களுக்கு இந்த வெட்டுக்கிளிகள் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன.

இதன் காரணமாக அந்த நாட்டு அரசு தேசிய அவசர கால நிலையை பிரகடனப்படுத்தி உள்ளது. போர்க்கால அடிப்படையில் வெட்டுக்கிளிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அதிகாரிகள் இறங்கி உள்ளனர். அந்த நாட்டில் ஏப்ரல் மாதம் அறுவடை காலம் என்பதால் அதற்குள் நிலைமை கட்டுக்குள் வருமா என்று விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.

## பாடசாலையில் நெரிசல் 14 மாணவர்கள் மரணம்!

### கென்யாவில் இடம்பெற்ற சோகம்



கென்யாவின் மேற்கு பகுதியில் உள்ள பள்ளியில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 14 குழந்தைகள் உயிரிழந்தனர்.

ககமிகா நகரில் உள்ள தொடக்கப் பள்ளி ஒன்றில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்நிலையில், நேற்று மாலையில் பள்ளி முடிந்ததும் மாணவர்கள் குறுகலான படிக்கட்டுகள் வழியாக வெளியே வந்தபோது திடீரென நெரிசல் ஏற்பட்டது.

இதில் குழந்தைகள் பலர் ஒருவர் மீது மற்றவர் விழுந்ததில் அவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு 14 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

40க்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நெரிசல் எதனால் ஏற்பட்டது, மாணவர்கள் பீதியடைந்து ஓடியது ஏன் என்பது குறித்து பள்ளி நிர்வாகத்திடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கென்யாவில் இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நடப்பதாகவும், அங்கு பள்ளிகளின் பாதுகாப்புத்தன்மை கேள்விக்குறியாக இருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## சீனாவில் 10 நாள்களில் கட்டித் திறக்கப்பட்ட ஆயிரம் படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி!

### கொரோனா வைரஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க

பெய்ஜிங்,பெப்.05

சீனாவில் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வரும் நிலையில், இந்த வைரஸ் தாக்கியவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 10 நாள்களில் கட்டப்பட்ட புதிய ஆஸ்பத்திரி நேற்று முன்தினம் திறக்கப்பட்டு மருத்துவ பணிகள் தொடங்கியுள்ளன.

சீனாவின் ஹூபெய் மாகாணத் தலைநகர் உகானில் இருந்து கடந்த டிசம்பர் மாத இறுதியில் பரவிய கொரோனா வைரஸ் தற்போது நாடு முழுவதும் அசுர வேகத்தில் பரவி வருகிறது. இதனால் நாளுக்கு நாள் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன.

அங்கு திங்கள் நிலைவரப்படி கொரோனா தாக்குதலுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 361 ஆக உயர்ந்து விட்டது. புதிதாக 2,829 பேருக்கு இந்த வைரஸ் தாக்குதல் கண்டறியப்பட்டு உள்ளதால், இந்த வைரஸ் உறுதிசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையும்



17,205 ஆக ஆதிகரித்து உள்ளது.

கொரோனா தாக்குதல் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் 21,558 ஆக உயர்ந்து இருக்கிறது. இதைத்தவிர நோய் அறிகுறி இருக்கும் 1லட்சத்து 52 ஆயிரத்து 700 பேரின் உடல் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்த வைரஸ் தாக்கி சிகிச்சை பெற்று வருபவர்களில் 2 ஆயிரத்து 296 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

அதேநேரம் இந்த வைரஸ் பாதித்து சிகிச்சை பெற்றவர்களில் பலரும் உடல்நலம் தேறி வீடு திரும்பி



வருகின்றனர். அப்படி இதுவரை 475 பேர் சிகிச்சை முடிந்து சென்றிருக்கின்றனர் எனவும் சீன மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸின் பிறப்பிடமாக கருதப்படும் உகானில் இந்த வைரஸ் பாதிப்பால் மருத்துவமனைகள் அனைத்தும் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. எனவே அங்கு 2 புதிய தற்காலிக ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

இதில் 1000 படுக்கைகள் கொண்ட முதல் ஆஸ்பத்திரி நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. ஹூவோன்ஷான் என பெயரிடப்பட்டுள்ள இந்த ஆஸ்பத்திரி பல்துறை பணியாளர்கள் கொண்ட 7 ஆயிரம் பேர் அடங்கிய மிகப்பெரும் குழு மூலம் கடந்த 10 நாட்களாக 24 மணி நேரமும் பணியாற்றி உருவாக்கப்பட்டு உள்ளது.

60 ஆயிரம் சதுர அடியில் கட்டப்பட்டுள்ள இந்த ஆஸ்பத்திரியில் தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகள், 30 அவரச சிகிச்சை பிரிவுகள், சிறப்பு வெண்டிலேட்டர் கருவிகள் என நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. மேலும் வெளியே உள்ள மருத்துவ நிபுணர்களுடன் டாக்டர்கள் கலந்தாலோசிப்பதற்காக காணொலிக் காட்சி அரங்குகள் என சிறந்த தொழில்நுட்ப வசதிகளும் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த ஆஸ்பத்திரியில் தற்போது நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை நடவடிக்கைகள் தீவிரமாக தொடங்கப்பட்டு உள்ளன. இந்த ஆஸ்பத்திரியை தொடர்ந்து 1500 படுக்கைகள் கொண்ட மற்றொரு ஆஸ்பத்திரியும் இந்த வாரம் திறக்கப்பட உள்ளது.

காலைக்கதிர்
Kalaikathir



# இலங்கை ஒற்றையாட்சியுள்ள நாடு பௌத்தத்தை வளர்ப்பதே என் பணி

## சுதந்திர தின நிகழ்வில் கோட்டா திட்டவட்டம்

இலங்கை ஒற்றையாட்சியுடைய அரசாகும். சுதந்திரமும், இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஜனநாயகக் குடியரசாகும். – இவ்வாறு நேற்று தனது சுதந்திர தின உரையில் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

எனது ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டின் பௌத்த தத்துவத்தைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 72ஆவது சுதந்திரதின நிகழ்வுகள் நேற்றுக் காலி முகத்திடலில் இடம்பெற்றன. இதில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை ஒற்றையாட்சியுடைய அரசாகும். சுதந்திரமும், இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஜனநாயகக் குடியரசாகும். 500 ஆண்டுகளாக ஏகாதிபத்திய காலனித்துவ கால ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்று இன்றோடு 72 வருடங்களாகின்றது. இன்றைய தினம் அரச தலைவர் என்ற வகையில் நீங்கள் பெற்ற சுதந்திரத்தை மேலும் பலப்படுத்துவதற்காக உறுதிபூண்டே உங்களுக்கு உரை நிகழ்த்துகின்றேன்.

இச்சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் அதனை உறுதிப்படுத்துவதற்குமாக தம்மை அர்ப்பணித்த சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே மற்றும் பேர்கர் ஆகிய தலைவர்களுக்கு எனது பெருமதிப்பைச் செலுத்துகின்றேன்.

இலங்கையினுள் வாழ்கின்ற ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாகவும் பாதுகாப்போடும் வாழும் உரிமையுண்டு. அவர்களது சுதந்திரமாக சிந்திக்கும் உரிமையையும், சுயாதீனமாக அபிப்பிராயம் கொள்ளும் உரிமை போன்று கருத்துக்களை தெரிவிக்கும் உரிமையையும் நாம் எப்பொழுதும் உறுதி செய்வோம். எந்தவொரு பிரஜைக்கும் தான் விரும்பும் மதத்தை வழிபடுவதற்காகவுள்ள உரிமையை நாம் எப்பொழுதும் மதிப்போம். தத்தமது நண்பர்களை தெரிவு செய்வது போன்று அமைதியான ஒன்று கூடலுக்கும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு. இலங்கைப் பிரஜையொருவர் தான் தெரிவு செய்து கொள்ளும் மக்கள் பிரதிநிதிகள் ஊடாக அரசியல் செயற்பாட்டிலும் அரச நிருவாகத்திலும் சம்பந்தப்படும் உரிமையை நாம் எப்பொழுதும் பாதுகாப்போம்.

இவை அனைத்தும் எவராலும் சவால்விட முடியாத மனித உரிமைகள் என்றே நாம் கருதுகிறோம். ஜனநாயகத்தை சீரான முறையில் நடைமுறைப்படுத்தும் போது எம்மால் சரிசமப்படுத்த வேண்டிய பல துறைகள் உள்ளன. நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறையானது அதன் போது மிக முக்கியமாகிறது. அதிகாரப் பரவலாக்கலின் போது மத்திய அரசு மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பொறுப்புக்களுக்கு இடையே சிறந்த ஒருமைப்பாடு இருக்க வேண்டும்.

பொது மக்களும் பாதுகாப்புத் துறைகளும் ஒவ்வொருவரின் பொறுப்புக்களை புரிந்து கொள்ள வேண்டும் என்பதுடன் பிரஜைகளுக்கு தனிப்பட்ட உரிமைகளைப் போன்று கூட்டுரிமைகளும் உள்ளனவென்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் இடையேயான கூட்டிணைப்பு இதன்போது முக்கியமாகிறது.

சுதந்திரத்தின் பின் இக் குடியரசுக்குள் ஆட்சிக்கு வந்த ஒவ்வோர் அரச தலைவரும் சர்வஜன வாக்கு அதிகாரத்தின் மூலமாகவே தெரிவு செய்யப்பட்டனர். அவ்வாறு மக்கள் வாக்கினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்போதைய அரச தலைவர் என்ற வகையில் எனது பதவிக் காலத்திற்குள் நாட்டின் அனைவரினதும் தலைவராக, நாட்டின் நலன்கருதி உச்சக் கட்ட அர்ப்பணிப்போடு சேவையாற்ற நான் தயாராக உள்ளேன்.

ஜனநாயக ரீதியிலான ஒரு நாட்டில் தகுந்த திறமுறைக்கமைய அரச தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் பின் அவர் இந்நாட்டின் அனைத்து மக்களதும் ஜனாதிபதியாவார். அவர் தனது பதவிக் காலத்தினுள் முழுமொத்த இலங்கை மக்களுக்காகவே சேவையாற்ற வேண்டும். அவர் தனக்கு வாக்களித்த மக்களுக்கு மட்டும் சேவையாற்றும் கட்டுப்பாடுடையவராகார். ஒரு சமூகத்திற்கு சேவை புரியும் அரசியல் தலைவரல்லாது அனைத்து மக்களினதும் அரச தலைவர் என்ற வகையில் சேவை புரியும் நோக்கு எனக்குள்ளது.

ஜனாதிபதியாக இன, மத, கட்சி அல்லது வேறு எவ்வித பேதங்களுமின்றி ஒட்டுமொத்த இலங்கை மக்களையே நான் இன்று பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். எந்தவொரு ஜனநாயக ரீதியிலான சமூகத்திலும் நன்மைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் வலுவான நிறைவேற்றுத்துறையும், சட்டவாக்கத்துறையும் அத்துடன் தன்னாதிக்கமுள்ள நீதிமன்றமும் தேவைப்படுகிறது.

ஒரு நாட்டின் இருப்புக்காக இன்றியமையாத இம் முக்கிய நிறுவனங்கள் தொடர்பில் எந்தவொரு



வகையிலும் மக்கள் நம்பிக்கை சீர்கெடுமானால் அது ஒரு நாட்டின் அராஜகத்திற்கு காரணமாகும். ஆகையால் அனைத்துத் தரப்புகளும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நாட்டின் நலன் கருதியும், மக்களின் இறைமையை பாதுகாப்பதற்கான தேசிய நோக்கையும் கடமையையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இந்நாட்டு மக்களின் தேவைகளை நடைமுறைப்படுத்தும் கடப்பாடு எனக்கு உண்டு. அது எனது பொறுப்பும் கடமையுமாகும். அதனை செயற்படுத்துவதற்கான எந்தவொரு தடையையும் அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்தோ அல்லது சட்டவாக்கத் துறையினரிடமிருந்தோ, அல்லது நீதித்துறையிடமிருந்தோ நான் எதிர்பார்ப்பதில்லை.

நான் உங்களது சுதந்திரத்தை மதிப்பது மட்டுமல்லாது அதன் வளர்ச்சிக்காகவும் அர்த்தமுள்ள ஜனநாயக நாட்டில் அரசியல், பொருளாதார ரீதியில் சுதந்திரமாக செயலாற்றுவதற்காகவும் உறுதியளிக்கின்றேன். நீண்ட காலமாக அரசாங்க நிருவாக விஸ்தரிப்பு முறையினால் மக்களின் சுதந்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

தகுந்த ஆய்வு அல்லது ஒருங்கிணைப்பின்றி விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளினால் இன்று மக்கள் பெரும் தொல்லைகளை எதிர்நோக்கியுள்ளனர். இதனூடாக பல ஊழல்களுக்கும் மோசடிகளுக்கும் வழிவகுக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் காலம், வளங்கள் மற்றும் ஜீவனோ பாயம் போன்றவற்றை இழக்கும் சந்தர்ப்பம் அதிகமாகும்.

மனிதர்களின் அன்றாட வாழ்க்கை தொடர்பான அநேகமான தேவைகளுக்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் தேவைகளை நாங்கள் மீண்டும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தவறுகளை புரிகின்ற அற்பமானவர்களுக்கு எதிராக உடனுக்குடன் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதே தவிர பெரும்பாலானவர்களின் மீது தேவையற்ற கடப்பாடுகளை விதிப்பதை நாங்கள் மேற்கொள்ளலாகாது. சட்டத்தை மதித்தும், ஒழுக்கப் பண்பாட்டோடும், நன்நெறிகளோடும் வாழ்வதற்கான உண்மைச் சுதந்திரத்தை நாம் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மக்கள் சுதந்திரமாக சுயதொழிலினை, பாரம்பரிய கைத்தொழிலினை அல்லது தொழிற்றுறையினை புரிவதற்குத் தடையாகும் காலங்கடந்த சட்டதிட்டங்கள், வரி மற்றும் ஒழுங்கு விதிகள் கட்டணங்கள் துரிதமாகத் திருத்தப்பட வேண்டும்.

மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் மேல் சுமத்தப்பட்டுள்ள அநாவசியமான தடைகளை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுப்போம். இலங்கை பழைமை வாய்ந்த வரலாற்றுடைய நாடாகும். பௌத்த தத்துவத்தினால் போஷிக்கப்பட்ட சகல மதத்தவர்களுக்கும், சகல இனத்தவர்களுக்கும் பாதுகாப்பான நாடாகும்.

எனது ஆட்சிக் காலத்தினுள் எவரும் தான் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கான சுதந்திரத்தை நான் உறுதிப்படுத்துவேன். நீதி, நியாயத்தை உறுதிப்படுத்தும் அத்துடன் எந்தவொரு பிரசைக்கும் அநீதி விளையாத தார்மீகமான அரச நிருவாக முறையை நடாத்துவதற்கே பௌத்த தத்துவத்தின் மூலம் எமது ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை கிடைக்கப்பெற்றுள்ளது.

எனது பதவிக்காலத்தினுள்ளும் இந்நாட்டில் பௌத்த தத்துவத்தைப் பாதுகாத்துப் போஷிப்பதற்காக நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். சமூக மற்றும் பொருளாதார முரண்பாடுகளை ஒழித்தல் மூலமே மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்க முடிகிறது. ஒற்றையாட்சியினுள் எல்லாப் பிரஜைகளுக்கும் சம உரிமைகள் உரித்தாதல் வேண்டும்.

இன்றும் எமது மக்கள் சமூகத்தினுள் இருப்பவர், இல்லாதவர் எனும் பெருமளவிலான ஏற்றத்தாழ்வு இருக்கின்றது. நகர்ப்புற பிரதேசங்களில் உள்ள வசதிகள் கிராமியப் பிரதேசங்களில் இல்லை. எல்லாப் பிரதேசங்களிலும் கல்வி வசதிகள் சமநிலையில் இல்லை. எல்லாப் பிரதேசங்களிலும் சுகாதார வசதிகள் சமநிலையில் இல்லை. தொழில் வாய்ப்புக்கள் எல்லாப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படவில்லை.

இதுவொன்றும் இன ரீதியாகவோ, மத ரீதியாகவோ வலுப்படும் நிலைமைகள் அல்ல. அவை நாட்டின் பொதுப் பிரச்சினைகளாகும். வாழும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் போது நாங்கள் முதன் முதலாக செய்ய வேண்டியது மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்தலாகும். ஆகவே தான் நாங்கள் மக்களின் வறுமையை ஒழித்தலை அரசின் முன்னுரிமையாகக் கருதுகின்றோம். முப்பது வருட கால யுத்தத்தைப் போன்று மேலும் பல்வேறு காரணங்களினால் எமது நாட்டின் அபிவிருத்திப் பணிகள் மிகவும் தாமதமாகியுள்ளன. எம்மால் மேலும் காலத்தை வீணாக்க முடியாது.

எமது நாட்டின் விசேடமான புவியியல் அமைவு, பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்கள் என்பவற்றை உரியவாறு பயன்படுத்தி உலகப் பொருளாதாரத்தின் புதிய போக்குகளை அணுகி எமது அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதற்காக நாங்கள் நடவடிக்கை எடுப்போம். வினைத்திறன் மிக்க தூய்மையான ஒரு அரச சேவை நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாத காரணியாகும். மக்களுக்கு சுதந்திரத்தின் அதிகபட்ச பயன்களை வழங்குவதாயின் அரசாங்க நிருவாகம் உரியவாறு நடைமுறைபடுத்தப் படுதல் வேண்டும். இதற்காக முழு மொத்த அரசாங்க நிருவாகமே பொறுப்பை கையேற்க வேண்டும்.

பயங்கரவாதிகள், அடிப்படைவாதிகள், கள்வர்கள், எதிரிகள், குண்டர்கள், கப்பம் பெறுபவர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை துன்புறுத்துபவர்கள் ஆகியோரினால் இயல்பான மக்கள் வாழ்விற்கு தடைகள் ஏற்படுமாயின் அவ்விடத்தில் மக்களுக்குச் சுதந்திரம் இல்லை. தேசிய பாதுகாப்பைப் போன்று மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன்பாலும் நாங்கள் முக்கிய கவனம் செலுத்தியுள்ளோம். பயங்கரவாதத்திற்கு வழிவகுக்கும் அடிப்படைவாத அமைப்புக்களை மேலும் இந்நாட்டில் செயற்படுவதற்கு நாங்கள் இடமளியோம். நாடு பூராகவும் பரவியுள்ள போதைப்பொருள் இடையூறிலிருந்து பிள்ளைகளை மீட்கும் வரை பெற்றோருக்குச் சுதந்திரம் இல்லை. அரச நிறுவனங்களினுள் ஊழல்கள், மோசடிகள் இருக்கும் வரை பொது மக்களுக்குச் சுதந்திரம் இல்லை.

ஆகையால் இயல்பான மக்கள் வாழ்வுக்கு அழுத்தம் செலுத்துகின்ற அனைத்து சமூக இடைறுகளையும் ஒழிப்பதற்காக சட்டத்தை கடுமையாகச் செயற்படுத்து வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இந்நடவடிக்கைகளை வினைத்திறமையாக்குவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை தற்போது பாதுகாப்புத்துறையினுள் ஆரம்பித்துள்ளோம்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# பொய்மையில் இலங்கை உழல்வதை காணப் பொறுக்க முடியாமலுள்ளது!

## அத்துரலிய ரத்ன தேரரின் கருத்துக்கு விக்கி பதில்

யாழ்ப்பாணம், பெப். 05

சிங்களமக்கள்மீதுஎனக்குப்பகையோ வெறுப்போ இல்லை. ஆனால் பொய்மை யில் இலங்கை உழல்வதைக் காணப் பொறுக்க முடியாது இருக்கின்றது என்று வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த சி.வி.விக்னேஸ்வரன் முயற்சிக்கிறார் என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்த கருத்து தொடர்பாக வாரம் ஒரு கேள்விக்கான பதிலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் –


இனங்களுக்கிடையில் ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறும் அத்துரலிய ரத்ன தேரர், ஏன் வடக்கு கிழக்கில் 2000 ஆண்டுகளுக்கு மேல் இன்று வரையில் தமிழ் மொழி பேசப்பட்டு வந்ததை மறந்து சிங்கள மொழியே நாடெங்கிலும் தனிமொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை ஆதரித்து வந்தார்?

இதனால் பிளவு ஏற்படும் என்று அவர் கருதவில்லையா என்றும் இப்போதும் வட கிழக்கு மாகாண சபைகளுக்கு சிங்களத்தில் மட்டும் கடிதங்கள் மத்திய அரசினால் அனுப்பப்பட்டு வருகின்றனவே அதைப் பிளவை ஏற்படுத்தும் செயல் என்று அவர் ஏன் கூறவில்லை?

ஒரு சாதாரண சிங்களக் குடிமகன் இவ்வாறு கூறியிருந்தால் நான் அதைப் பற்றி அலட்டிக் கொண்டிருக்க மாட்டேன். ஆனால் வணக்கத்திற்குரிய ரத்னதேரர் சில காலத்திற்கு முன்னர் என்னை வந்து சந்தித்துச் சென்றவர். இப்பொழுதும் என்னுடன் நல்லுறவைக் கொண்டிருப்பவர்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டும். பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். வறுமையில் உள்ள மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். நாம் சமமானவர்கள் என்பது போன்ற அவரின் கருத்துக்களை நான் வரவேற்கின்றேன்.

அனைவருக்குள்ளும் ஓடும் இரத்தம் ஒன்றுதான் என்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள். அதை எவரும் மறுக்கவில்லை. ஆனால் நான் இனங்களுக்கிடையில்



பிளவை ஏற்படுத்த முயல்கின்றேன் என்பதை என்ன அடிப்படையில் அவர் கூறினார் என்பது எனக்குத் தெரியவில்லை.

நான் உண்மைகளை வெளியிட்டால் இனப் பிளவுகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவர் கருதியிருந்தால் அதை நான் மறுக்கின்றேன். பொய்களைக் கூறி முழு சிங்கள மக்களையும் பிழையாக வழிநடத்திய ஒரு நாட்டில் நான் உண்மை இதுதான் என்றால் அதற்குப் பொறுப்பு நானா அல்லது பிழைகளை இதுவரை காலமும் வெளிப்படுத்திய வணக்கத்திற்குரிய தேரர் போன்றவர்களா?

நான் பிளவை ஏற்படுத்தப் பார்க்கின்றேன் என்று அவர் கூறும் போது எனது உண்மைக் கூற்றுக்களை மறுக்க முடியாததால்தான் அவர் அவ்வாறு கூறுகின்றாரோ என்று நான் நினைக்க வேண்டியுள்ளது.

இதுவரை காலமும் நாட்டை சிங்கள பௌத்த நாடு என்று கூறி அதை உறுதிப்படுத்த உழைத்த பலர் இன்று நான் கூறும் உண்மைகளை அடியோடு வெறுப்பதை நான் உணர்கின்றேன். ஒன்றில் நான் கூறும் உண்மைகளை அவர்கள் ஏற்க வேண்டும், அப்போது பிளவு ஏற்படாது.

அல்லது நான் கூறுவன உண்மைக்குப் புறம்பானவை என்பதை நிரூபிக்க வேண்டும். அப்போதும் பிளவு ஏற்படாது. எனக்குத் தலைக்குனிவு மட்டுந்தான் அப்போது ஏற்படும்.

நான் என்ன கூறிவிட்டேன் பிளவை ஏற்படுத்த? இவ்வாறு பலவற்றை நான் உண்மையெனக் கண்டு கூறுகின்றேனே ஒளிய மக்களுக்குள் பிளவு ஏற்படுத்த நான் முனையவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் பிறந்து, படித்து, வாழ்ந்து வந்தவன் நான்.

என் அன்புமிக்க மருமகள்மார்கள் சிங்களவர்கள். சிங்கள மக்கள் மீது எனக்குப் பகையோ வெறுப்போ இல்லை. ஆனால் பொய்மையில் இலங்கை உழல்வதைக் காணப் பொறுக்க முடியாது இருக்கின்றது.

நான் உண்மையைக் கூறி வருகின்றேன். நான் கூறும் உண்மைகளில் பலவற்றை பேராசிரியர் இந்திரபால 2005 ல் எழுதிய நூலில் காணலாம். நான் கட்டுக் கதைகளை வெளிக்கொண்டு வரவில்லை.

இனத்துவேம் மிக்கவர்களே இதுகாறும் பொய்களையும் புனைகதைகளையும் உண்மையென சிங்கள மக்களை நம்ப வைத்துள்ளார்கள். ஆகவே பிளவு ஏற்படப் போகின்றதென்றால் புனைகதைகளை முதலில் அரங்கேற்றியவர்களே அதற்குக் காரணம். நான் அல்ல என்று கூறியுள்ளார். (ஐ)

# யாழ்.செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வு






யாழ்ப்பாணம், பெப். 05

இலங்கையின் 72ஆவது சுதந்திர தினம் நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் நேற்றுக் காலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ் மற்றும் சிங்களம் என இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

தேசியக் கொடியை மாவட்ட செயலாளர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மத குருமார்களின் ஆசியுரை இடம்பெற்று, மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள பழைய பூங்காவில் மரநடுகை நிகழ்வும் இடம் பெற்றது. (ஐ - 07)

# 17 கைதிகள் பொதுமன்னிப்பில் யாழ். சிறையிலிருந்து விடுதலை



யாழ்ப்பாணம், பெப். 05

இலங்கையின் 72ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கட்டிருந்த தண்டனைக் கைதிகளான பெண் உட்பட 17 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டனர்.

நாடு முழுவதும் ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பின் அடிப்படையில் 512 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இதில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 17 பேர் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் திருட்டு, நம்பிக்கை மோசடி மற்றும் குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் போன்ற சிறிய குற்றங்களின் காரணமாகச் சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்களாவர்.

வன்புணர்வு, பாலியல் துன்புறுத்தல்கள், கொள்ளை மற்றும் இலஞ்சம் கோருதல் போன்ற பெரிய குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள் எவரும் இந்தப் பட்டியலில் இல்லை என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ - 07)

PCP northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

காலைக்கதிர் Kalaikathir



# முதலிடத்தில் நீடிக்கின்றார் பாபர் அசாம்

கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பாரத்துக் காத்திருந்த ரி – 20 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகிறது.

அதன்படி, தற்போது ரி – 20 உலகக்கிண்ணத்தை முன்னிட்டு ஒவ்வொரு நாடுகளும் ரி – 20 தொடர்களை நடத்தி வருகின்றது.

இதில் அண்மையில் இந்தியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ரி – 20 தொடர் நடைபெற்று முடிந்தது.

இதில் இந்தியா அணி 5 – 0 என்ற கணக்கில் தொடரை முழுமையாகக் கைப்பற்றியது.

இந்த நிலையில், ஐ.சி.சி.யின் ரி – 20 துடுப்பாட்ட துடுப்பாட்ட வீரர்களின் புதிய தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தரவரிசைப் பட்டியல்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இந்தப் பட்டியலில், பாகிஸ்தானின் பாபர் அசாம் தொடர்ந்தும் 879 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கின்றார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் கே.எல். ராகுல் நான்கு இடங்கள் ஏற்றம் கண்டு, இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இதுவே ரி – 20 தரவரிசையில் ராகுலின் சிறந்த தரநிலையாகும்.

நியூஸிலாந்து அணிக்கெதிரான தொடரில் சிறப்பாக செயற்பட்டு தொடரின் நாயகனாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னணியில், அவர் இந்த ஏற்றத்தைக் கண்டுள்ளார்.




ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் ஆரோன் பிஞ்ச், ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 810 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் கொலின் முன்ரோ 785 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் நான்காவது இடத்தை பிடித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் டாவிட் மாலன் இரண்டு இடங்கள் பின்தள்ளப்பட்டு, 782 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் கிளென் மேக்ஸ்வெல், ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 766 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் எவீன் லீவிஸ் 702 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளார்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஹஸ்ரதுல்லா சஸாய் 692 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் எட்டாவது இடத்தை பிடித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் விராட் கோஹ்லி, 673 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தை பிடித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் ரோஹித் சர்மா, மூன்று இடங்கள் ஏற்றம் கண்டு 662 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தை பிடித்துள்ளார்.



# இந்திய அணியில் மாயங் பிரித்வீ ஷாவுக்கு வாய்ப்பு

நியூஸிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும், இந்தியா அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்ப்பு மிக்க இந்த அணியில், ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா உபாதைக் காரணமாக விலகியுள்ளார்.

நியூஸிலாந்து அணிக்கெதிரான ஐந்தாவது ரி – 20 போட்டியில், துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும்போது, அவர் தசைப் பிடிப்பினால் அவதிப்பட்டார்.

இன்னமும் தசைப் பிடிப்பு முழுமையாகக் குணமடையாததால், நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் இருந்து ரோஹித் சர்மா விலகியுள்ளார்.

ஆகையால் அவருக்கு பதிலாக மற்றொரு சிறந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மாயங் அகர்வால் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதுதவிர, ஊக்கமருந்து சோதனையில் சிக்கி தடையிலிருந்து மீண்டுள்ள இளம் வீரர் பிரித்வீ ா மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஷிகர் தவான் ஏற்கனவே உபாதையினால் ஓய்வில் இருக்கின்ற நிலையில் பிரித்வீ ாவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல ஆரம்ப துடுப்பாட்ட வீரரான கே.எல். ராகுலுக்கு டெஸ்ட் தொடரில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

மேலும், இளம் வீரரான சுப்மான் கில் இப்போட்டியின் ஊடாக டெஸ்ட் அறிமுகத்தை பெறுகிறார்.

அணியின் முன்னணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் உபாதை மற்றும் ஓய்வில் இருப்பதால், மாயங் அகர்வால் மற்றும் சுப்மான் கில் ஆகியோர் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரஞ்சி கிண்ணத் தொடரின்போது கணுக்கால் காயம் அடைந்த வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மாவும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவர் உடற் தகுதியைப் பொறுத்து அணியில் விளையாடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விராட் கோஹ்லி தலைமையிலான அணியில், மாயங் அகர்வால், பிரித்வீ ஷா, சுப்மான கில், செடீஸ்வர் புஜாரா, அஜிங்கியா ரஹானே, ஹனுமா விஹாரி, ரித்திமான் ஷா, ரிஷப் பந்த், அஸ்வின், ஜடேஜா, பும்ரா, உமேஷ் யாதவ், மெஹமட் ஷமி, நவ்தீப் சைனி, இசாந் சர்மா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்தியக் கிரிக்கெட் அணி, நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட ரி – 20 தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவதாக நடைபெற்ற ரி – 20 தொடரை 5 – 0 என்ற கணக்கில் இந்தியா அணி முழுமையாக கைப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுகின்றது. இதன் முதல் போட்டி இன்று நடைபெறுகின்றது.

அடுத்ததாக ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு அங்கமாக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறுகின்றது. இதன் முதல் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி வெலிங்டன் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.



# ஜொலிஸ்ரார்ஸ் வெற்றி!

*கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகத்தால் வருடந்தோறும் நடாத்தப்படும் விக்ரம் , ராஜன் , கங்கு ஞாபகார்த்த சுற்றுப்போட்டியின் முதல் போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதிய போட்டி நேற்றுமுன்தினம் கொக்குவில் இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதற்கமைய துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி அணி 29.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் அனுரதன் 49 ஓட்டங்களையும், றொகான் 34 மற்றும் சிவராஜ் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜொலிஸ்ராரஸ் அணி சார்பில் கோபிராம் 4 இலக்குகளையும், வாமணன் 2 இலக்குகளையும் மற்றும் ஜனார்த்தனா, பிருந்தன், கிரிசாந் ஆகியோர் தலா 1 இலக்கை கைப்பற்றினார்.*

*பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி 27.5 ஓவர்களில் 6 விக்கட்களை மட்டும் இழந்து 177 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கைஎட்டியது. முடிவில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 4 விக்கட்களால்திருநெல்வேலி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் சந்தோஸ் 60 ஓட்டங்களையும், தனுஸ்ரன் 36, கிரிசாந் ஆட்டமிழக்காமல் 32 றுக்ஷமன் 23 ஓட்டங்களையும் ஜொலிஸ்ரார்ஸ் சார்பில் பெற்றனர். பந்துவீச்சில் திருநெல்வேலி அணியின் சுஜன் 2 இலக்குகளையும், சுரேந்திரன் மற்றும் சிவராஜ் ஆகியோர் தலா 1 இலக்குகளை கைப்பற்றினர். (ஐ)*

# சினிமா ஹீரோ நடிகராகின்றார் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங்



இந்திய கிரிக்கெட் அணி மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர் ஹர்பஜன் சிங், கோலிவுட்டில் கதாநாயகனாக அறிமுகம் ஆகவுள்ளார்.

சந்தானம் நடிக்கும் டிக்கிலோனா என்ற படத்தில் நடிகராக அறிமுகமாகி உள்ள ஹர்பஜன், கன்சல்டன்ஸி சேர்வீசஸ் என்ற வெப் சீரிஸில் நடித்துவருகிறார். இந்நிலையில், இயக்குனர் ஜான் பால்ராஜ் மற்றும் ஷாம் சூர்யா இயக்கும் 'பிரண்ட்ஷிப்' என்ற படத்தில் ஹர்பஜன் சிங் கதாநாயகனாக நடிக்கவுள்ளார் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இப்படத்தின் போஸ்டரையும் ஹர்பஜன் சிங் ட்விட்டரில் வெளியிட்டுள்ளார்.

# ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் புதிய பெயரை நிராகரித்தது தேர்தல் ஆணைக்குழு!

## ஆனந்தசங்கரியின் எதிர்ப்பை அடுத்து

கொழும்பு, பெப். 05

ஈழமக்கள் புரட்சி விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) தனது பெயரை மாற்ற முயன்றபோதும், அதன் முதற்கட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

தமிழர் ஐக்கிய முன்னணி (ரி.யு.எவ்.) என தமது அமைப்பின் பெயரை மாற்ற, ஈ.பி.ஆர்.எல்.எவ் தரப்பினால் தேர்தல் ஆணைக்குழுவிடம் விண்ணப்பிக்கப் பட்டிருந்தபோதும், தேர்தல்கள் ஆணைக் குழு அதை நிராகரித்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு தனது பெயரை தமிழர் ஐக்கிய முன்னணி யென்றும், சின்னத்தை நிறைகுடமாகவும் மாற்றுவதற்கு முயற்சித்திருந்தது.

வடக்கு முன்னாள் முதலமைச்சர் விக் னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட் டணி, தேர்தலில் போட்டியிட வசதியாக இந்த ஏற்பாடுகளை ஈ.பி.ஆர்.எல்.எவ். மேற்கொண்டது. அந்தக் கட்சியின் தலை வராக விக்னேஸ்வரனை பொறுப்பேற கவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அழைப்பு விடுத்தி ருந்தது. எனினும், கட்சியின் பொதுச்



செயலாளராக சர்வேஸ்வரன் நீடிப்பார் என்ற பரிந்துரையை ஈ.பி.ஆர்.எல்.எவ். செய்திருந்தது.

எனினும், அந்த தமிழர் ஐக்கிய முன் னணியின் வாழ்நாள் பொதுச்செயலாள ராக தானே பதவிவகிக்கவேண்டுமென விக்னேஸ்வரன் விரும்புவதால், இந்த முயற்சியும் தேக்கமடைந்துள்ளது.

இதற்கிடையில், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தேர் தல்கள் ஆணைக்குழுவுக்கு நேரில் சென்று, கட்சியின் பெயர், சின்னம் என் பவற்றை மாற்ற விண்ணப்பித்திருந் தார்.

எனினும், ஈ.பி.ஆர்.எல்.எவ். விண்ணப் பித்திருந்த தமிழர் ஐக்கிய முன்னணி யென்பது, தமிழர் விடுதலைக் கூட்டணி யின் ஆரம்பகாலப் பெயராகும். தமிழர சுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங் கிரஸ் என்பன கூட்டிணைந்தபோது, முதலில் தமிழர் ஐக்கிய முன்னணியென்ற பெயரையே வைத்தார்கள். பின்னரே, தமிழர் விடுதலைக் கூட்டணியென பெயர் மாற்றப்பட்டது.

அந்தப் பெயர் ஏற்கனவே பாவிக்கப் பட்டதன் அடிப்படையில், தற்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு ஏதேனும் ஆட் சேபணைகள் உள்ளதா என அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தேர்தல்கள் ஆணைக்குழு வினவியது.

அந்தப் பெயரை ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக்கு வழங்கக்கூடாது. அதில் தமக்கு ஆட்சேபனை உள்ளதாக ஆனந்த சங்கரி குறிப்பிட்டுள்ளார். அத்துடன், எழுத்து மூலமாக நேற்று தமது ஆட் சேபனையைத் தெரியப்படுத்தப் போவதா கவும் குறிப்பிட்டார்.

ஆனந்தசங்கரியின் எதிர்ப்பைய டுத்து, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழர் ஐக்கிய முன்னணியென பெயரை மாற்றும் முயற்சி தோல்வியடைந்துள்ளது. இனி வேறு பெயர்களையே பரிந்துரைக்க வேண்டும். (ஐ)

# வவுனியா நகரசபை மைதானத்தில் 72 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்









வவுனியா, பெப். 05

இலங்கையின் 72ஆவது சுதந்திர தின நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில் கோலாகலமாக நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் எஸ்.எம்.சமன் பந்து லசேன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கலந்துகொண்டார்.

மைதான வாயிலில் இருந்து விருந்தினர்கள் ஊர்வல மாக அழைத்து வரப்பட்டதுடன், தேசிய கொடியை நாடா ளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஏற்றி வைத்தார்.

பின்னர் தேசிய கீதம் பாடசாலை மாணவர்களால் சிங்கள, தமிழ் ஆகிய மொழிகளில் தேசிய கீதம் இசைக் கப்பட்டிருந்தது.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு மற்றும் பான்ட் வாத்திய அணிவகுப்புக்கள் கோலாகல மாக இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸ லால் டி சில்வா,மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயாலளர்களான நா.கமலதாசன், ஜானக, மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தி னர், மதகுருமார்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவிலும் சுதந்திரதின நிகழ்வு

முல்லைத்தீவு, பெப். 05

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்றுக் காலை 8 மணிக்கு முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின்போது முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரு மான ச. கனகரத்தினம் கலந்துகொண்டு தேசியக் கொடி ஏற்றி மரநடுகை மேற்கொண் டார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன், கணக்காளர், மாவட்ட செயலக திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், மதகுரு மார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







## இலங்கை ஒற்றையாட்சியுள்ள...

(11 ஆம் பக்கம் பார்க்க...)

சிந்திக்கும் சுதந்திரத்தையும், எழுதுவதற்கான சுதந்திரத்தையும் நான் முழுமையாக உறுதிப் படுத்துவேன். அப்போது தான் தத்துவஞானிகளைப் போன்று உயர்மட்ட கலை ஆக்கங்கள் உருவாகும்.

எனது அரசு எப்பொழுதும் எதிர் அபிப்பிராயங் களை பொறுமையுடன் செவிமடுக்கத் தயாராக உள்ளது. ஊடகங்களுக்கு இன்று முழுமையான சுதந்திரம் இருக்கின்றது. எந்த ஒருவரும் சுதந்திர மாக கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமையை நாங்கள் வழங்கியுள்ளோம். சமூக ஊடகங்கள் சனநாயகத்திற்குப் புதிய சவால்களைத் தொடுக் கின்றது. இணையத்தளத்தில் அதிகமான காலத்தைக் கழித்துக் கொண்டு அநேகமான சந்தர்ப்பங்களில் அறிமுகமற்றவர்களுடன் தொடர்பு கொள்வதால் அவர்களது குற்றங்களின்படி பிழையான தகவல் பிரச்சாரங்களுக்கு உட்பட்டு தமது அபிப்பிராயங் களை விட வேறு அபிப்பிராயம் கொண்டவர்கள் தொடர்பில் உடனுக்குடன் தவறான அபிப்பிராயங் கள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பமுண்டு.

உங்களது மனச்சாட்சியின்படி செயற்படுமாறு நாங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின் றோம். எப்பொழுதும் நாட்டைப் பற்றி சிந்தியுங்கள். ஏனைய சகோதர நாட்டு மக்களைப் பற்றி சிந் தியுங்கள். அரசியல் தேவைகளைப் பற்றி மட்டும் சிந்தியாது உங்கள் செயல்களினாலும் சொற் களினாலும் நாட்டுக்கு தீமை ஏற்படுமா அல்லது நன்மை ஏற்படுமா என்பதை நன்கு சிந்தித்துப் பார்க்கவும்.

ஆயினும் அரசு பிழையான வழியில் செல் கிறதென உங்களுடைய மனச்சாட்சிக்குத் தென்படு மாயின் எப்பொழுதும் தயங்காது அதனைச் சுட்டிக் காட்டவும். நாங்கள் எப்பொழுதும் சட்டத்தின் இறைமையை மதித்து நடக்க வேண்டும். நீதி, நியா யமாக செயற்படும் போது தான் மக்களுக்கு உண் மையான சுதந்திரம் கிடைக்கின்றது. சட்டரீதியான நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் நிகழும் கலாசாரத்தை மாற்றுவதற்கு எனது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எமக்கு பல சவால்கள் உள்ளன. அதில் வெற்றிபெறுவதற்காக அரசாங் கம் எடுக்கும் முயற்சிக்கு உங்கள் அனைவரதும் ஆதரவு தேவைப்படுகின்றது. நான் தங்களின் முன்னிலையில் வைத்த கொள்கைப் பிரகடனம் இன்று நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய செயல் நெறியாகும். அதன் வாயிலாக சுபீட்சமான ஒரு தேசத்தை உருவாக்கு வது எமது எதிர்பார்ப்பாகும்.

எதிர்கால சந்ததியினருக்காக தற்கால சந்ததி யினரால் தான் இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும். வரலாற்றினால் எம்மீது சுமத்தப்பட்டுள்ள இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க பொறுப்புக் களை நிறைவேற்றுவதற்காக எம்முடன் ஒன்று சேருமாறு அனைத்து இலங்கை வாழ் மக்களி டமும் கேட்டுக்கொள்கின்றேன். உங்கள் அனைவ ரினதும் வளமான எதிர்காலத்திற்காக பிரார்த்தனை செய்கின்றேன் – என்றார்.

# வறுமையின் பிடியில் உள்ள மக்களை மீட்பதற்காக ஒன்றிணைய வேண்டும்

## கிளிநொச்சி அரச அதிபர் அழைப்பு

கிளிநொச்சி, பெப். 05

வறுமையின் பிடியில் உள்ள மக்களை மீட்பதற்காகவும் வறுமை ஒழிப்பதற்கு நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் 72ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கிளிநொச்சி அரச திணைக்களங்களிலும் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச திணைக்களங்களிலும் தேசிய கொடி ஏற்றப்பட்டு சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் காலை இடம்பெற்றன.

நிகழ்வில் உரையாற்றிய மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், இலங்கை பல்வேறு வெளிநாட்டவர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற நாளை, இன்று சுதந்திர தினமாக நாம் கொண்டாடுகின்றோம்.

குறிப்பாக ஆங்கிலேயர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் என பலரது ஆட்சியில் இருந்து இலங்கை விடுதலை பெற்றுள்ளது. ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்ததாக இன்றைய தினம் நாட்டு மக்களுடன் இணைந்து சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றோம்.

குறித்த சுதந்திரமானது இன்று எமக்கு பல விடயங்



களை கற்றுக்கொடுக்கின்றது, இன்று எமது கிளிநொச்சி மாவட்டம் வறுமையில் முதல் நிலையில் காணப்படுகின்றது. இந்த வறுமையின் பிடியில் உள்ள மக்களை மீட்பதற்காக வறுமை ஒழிப்பதற்கு நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

வறுமை ஒழிப்பிற்காக அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் வறுமை ஒழிப்பு விசேட வேலைத்திட்டத்திற்கு நாம் முழுமையாக ஒத்துழைத்தவர்களாக மாவட்டத்தில் உள்ள வறுமையை ஒழிக்க நாம் செயற்பட வேண்டும் என கோருகின்றேன்.

வறுமையின் பிடியில் சிக்கியுள்ள மக்களை விடுவிப்பதற்கு நாம் இன்றே எமது கடமைகளை மேற்கொள்ள வேண்டும். அது மாத்திரமன்றி, எங்கோ ஓர் இடத்தில் காணப்பட்ட போதைப்பொருள் பாவணை இன்று மாவட்டத்திற்கே சவால் விடுக்கும் அளவில் இன்று காணப்படுகின்றது.

மாவட்டத்தில் உள்ள மக்கள், குறிப்பாக இளைஞர்கள் மத்தில் போதைப்பொருள் பாவணை அதிகமாக காணப்படுகின்றது. சட்டவிரோத செயற்பாடுகளும் அதிகரித்து காணப்படுகின்றது.

இந்தநிலையில் போதைப்பொருளிற்கும், வறுமையிலும் சிக்குட்ட எமது சமூகத்தை மீட்டு அவர்களிற்கும் சுதந்திரத்தை பெற்றுகொடுக்க வேண்டும் என இன்றைய நாளிலே நாம் உறுதி கொண்டவர்களாக செயற்படுவோம் – என்றார். (ஐ)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம். இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சுதந்திர தினத்தன்று கிழக்கில் போராட்டம்






மட்டக்களப்பு, பெப். 05

கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் அமைப்பினால் மட்டக்களப்பில் மாபெரும் கவன வீர்ப்புப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் நேற்றுக் காலை ஆரம்பமான இந்த கவனவீர்ப்புப் பேரணி, மட்டக்களப்பு காந்தி பூங்கா வரை சென்றது.

இந்தப் பேரணியில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட காணாமல்போனவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படும் நாட்டில் சுதந்திர தினம் எதற்கு? என்ற கருத்தை முன்னிலைப்படுத்தி பதாதைகளையும் கறுப்பு கொடியையும் ஏந்தியவாறு உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பேரணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக கிளிநொச்சியில் கடுமையான நடவடிக்கை

## ஒருங்கிணைப்புக்குழு தலைவர் தெரிவிப்பு



கிளிநொச்சி, பெப். 05

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கான விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கான விசேடகூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல், கிரவல் அகழ்வு சட்டவிரோத மரம் வெட்டுதல் மற்றும் சட்டவிரோத மதுபான உற்பத்தி, கஞ்சா, போதைப்பொருள் பயன்பாடு உள்ளிட்ட சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக இனிவரும் நாட்களில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் போதைபொருள் பயன்பாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட அரச அதிபர் தலைமையில் விசேட குழு ஒன்று அமைக்கப்படும். இந்தக் குழுவில் பொலிஸ் அதிகாரிகள், வைத்தியத்துறை அதிகாரிகள், சிறுவர் மற்றும் பெண்கள் நல பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மதுவரி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட துறை சார்ந்த திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் அங்கம் வகிப்பர். இவர்கள் அவ்வவ்போது கூடி கலந்துரையாடிச் செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்வார்கள்.

அத்தோடு சட்டவிரோத மணல் மற்றும் கிரவல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்து வதற்கு கனிய வள திணைக்களத்திடம் இருந்து முழுமையான அறிக்கையைப் பெற்ற பின்னர் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் – என்றார்.



இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.ஏ.என்.கே.தமிந்த விஜயசிறி, கிளிநொச்சியில் இடம்பெறுகின்ற அனைத்து விதமான சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு விசேட நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளதாக உறுதியளித்தார் எனவும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பிரதி பொலிஸ் அதிபர் எச்.ஏ.என்.கே. தமிந்த விஜயசிறி, மேலதிக அரச அதிபர் ஸ்ரீமோகனன். பிரதேச செயலாளர்கள் மதத்தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சுகாதார திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள், சிறுவர் பெண்கள் பாதுகாப்பு உத்தியோத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# எழுவைதீவுக்கு 107 லட்சம் ரூபா ஒதுக்கினார் சிறிரதரன் எம்.பி!




யாழ்ப்பாணம், பெப். 05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கடந்த ஆண்டில் மாத்திரம் 107 லட்சம் ரூபா எழுவைதீவுப்பகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பங்குத்தந்தை இரோனியஸ் தெரிவித்துள்ளார்.

எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நாடாளுமன்ற உறுப்பினரின் ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவின் திறப்பு விழாவும் 2020 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தனித்தீவாக இருக்கிற இங்குள்ள எமது மக்கள் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற பாரிய இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதை அனைத்து தரப்பினரும் நன்கு அறிவார்கள். எமது மக்களின் தேவைகளை கருத்திற்கொண்டு 1கோடி 7 லட்சம் ரூபா கடந்த ஆண்டில் ஒதுக்கீடு செய்தமைக்கு நன்றி – என்றார்.

பாடசாலைகள் மைதானங்கள் தேவாலயங்கள் வீதிகள் போன்றவற்றுக்கே நாடாளுமன்ற உறுப்பினரின் ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையின் முதல்வர் ப.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அயற் பாடசாலையின் அதிபர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கம்

கொழும்பு, பெப். 05

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் பதவியில் அமர்த்தப்பட்ட ரோஹண தேவ பெரேரா உடனடியாக அமுலாகும் வகையில் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஊடக அமைச்சின் செயலாளர் அனுப்பிய கடிதம் ஒன்றுக்கமைய இந்தச் சேவை இடைநிறுத்தம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபன ஊழியர்கள் இவரின் நியமனத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டதையடுத்து இந்த நடவடிக்கையை ஊடக அமைச்சு எடுத்துள்ளதாக அறிய முடிந்தது. (ஐ)

# காட்டிக் கொடுக்கும் செயல்களை உடன் கைவிடவேண்டும் கருணா

## கோடீஸ்வரன் எம்.பி. கோரிக்கை



அம்பாறை, பெப். 05

தமிழ்த் தேசியத்தையும் தமிழ் மக்களையும் காட்டி கொடுக்கின்ற செயற்பாட்டை கருணா அம்மான் கைவிட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

சிங்கள மொழியில் மாத்திரம் தேசியகீதம் பாடுவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை எனக் கருணா தெரிவித்த கருத்து தொடர்பாகக் கூறுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்ற கருத்தை முன் வைத்திருக்கும் கருணா தமிழ் மக்களுக்குத் தான் திருந்திவிட்டார் எனப் பாசாங்கு செய்து வேடமிட்டு இருப்பது மீண்டும் தமிழ் மக்களுக்கு புலனாகிவிட்டது.

பாரத தேசத்திலும் பல மொழிகள் காணப்படுகின்றபோதும் ஒரு முறையில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்படுகிறது எனக் கருணா சுட்டிக்காட்டி இருப்பது அவரது மடமையை உணர்த்துகிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை காட்டிக்கொடுத்து போராட்டத்தைக் குழிதோண்டிப் புதைத்த கருணா, தான் திருந்திவிட்டார் என மக்களுக்குப் பாசாங்கு காட்டுகிறவராகத்தான் இருக்கின்றார்.

இந்திய தேசத்தில் பாடப்படும் தேசிய கீதமானது அங்கு வாழும் சிறுபான்மை மக்களது மொழியான வங்காள மொழியிலே பாடப்படுகிறது. இந்தியாவை ஒப்பிட்டு இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் பேசுவது அரசியல் ரீதியாக அவர் அதிக விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

இந்திய தேசம் பல மாநில கொண்ட ஒரு நாடு. அங்கு அதிகாரப் பரவலாக்கம் வழங்கப்பட்டதோடு மாநில சுயாட்சி நிலவுகிறது. இலங்கையை பொறுத்த வரை எந்த ஒரு மாநில சுயாட்சியும் வழங்கப்படவில்லை.

அரச கரும மொழியாக தமிழ் மொழி இருக்கும்போது தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படுவதால் எந்தவித பிரச்சினையும் இல்லை. மாறாக இன ஒற்றுமைதான் ஏற்படும். விமல் வீரவன்ஸ சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்கின்றார். அவருக்கும் கருணாவுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை. தமிழ்த் தேசியத்தையும் தமிழ் மக்களையும் காட்டி கொடுக்கின்ற செயற்பாட்டை கருணா கைவிட வேண்டும் – என்றார். (ஐ)

# மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சுதந்திர தின நிகழ்வு





மன்னார், பெப். 05

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தின நிகழ்வு மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் தேசிய சுதந்திர தின நிகழ்வு ஆரம்பமானது. மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து முதலில் தமிழிலும் பின்னர் சிங்களத்திலும் தேசிய கீதம் ஒலிக்கச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சர்வமத வழிபாடுகள் இடம்பெற்றன.

மாவட்ட செயலக வளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டதோடு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஐ)





# தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிட்டு நேற்றுப் போராட்டம்

*கொழும்பு, பெப். 05*

அக்கரப்பத்தனையில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டு தோட்டத் தொழிலாளி ஒருவரின் மகனான சுப்பையா சத்தியேந்திரா என்பவர் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

அக்கரப்பத்தனை, கிளாஸ்கோ தோட்ட மேற்பிரிவுக் குடியிருப்புப் பகுதியில் நேற்றுக் காலை தேசியக் கொடி வைபவ ரீதியாக முழுக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டு அதன்பின்னர் கண்டனம் தெரிவித்து அரைக் கம்பத்தில் பறக்கவிட்டு அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் உரிமைகள் தொடர்பான விடயங்களில் அரசாங்கம் உடனடியாக கவனஞ்செலுத்த வேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர் கருத்துத் தெரிவிக்கையில், நாடு 72 ஆண்டுகள் சுதந்திரம் அடைந்திருந்தாலும் கூட பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்னும் அடிமையாகவே இருக்கின்றனர். இவர்களுக்கான முறையான சம்பளம், உரிமை போன்றவை இன்னும் உரிய முறையில் கிடைக்கப்பெறாமல் பகடைக்காய்களாக வாழ்ந்து வருகின்றனர்.




மக்களை ஏமாற்றாமல் கூட்டு ஒப்பந்தத்தை இல்லாமல் ஆக்கி நாடாளுமன்றத்தில் இதற்கென ஒரு பொறிமுறையை உருவாக்கி அதனூடாக இவர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.

ஓரிரு தொழிற் சங்கங்கள் மாத்திரம் இதனைப் பற்றிப் பேசாமல் சல தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து இதற்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆகவே இனிவரும் காலங்களில் அரசு காலம் தாழ்த்தாமல் இதற்கு நல்ல முடிவு எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

New Syllabus 2020
Phoenix's English Work /grade - 5, Price Rs. 290/=
By.j.Myuras, Released. Available at all Leading
Book Shops Island Wide. Phoenix Publishers,
136/1 - E, Dam Street, Colombo -12.
Phone : 0112338661/ 0777319475/ 0776648526

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.


20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2020 இல் வெளியிடப்பெற்றது.